ஊவா வெல்லஸ்ஸ கல்வியின் அபிமானத்திற்கு

2013 - கல்விப் பொது தராதர உயர் தரப் பரீட்சை

சிப்சர உதானய

கலை /வணிகம்





எண்ணக்கரு

சஷிந்திர ராஜபக்ஷ

ஊவா மாகாண முதலமைச்சர்

பாட ஊக்குவிப்பு கருத்தரங்கு

நாங்கள் உருவாக்குவோம் புதிய ஊவா வெல்லஸ்ஸவை

கல்விப் பொதுத் தராதர உயர் தரப் பரீட்சை - 2013

சிப்சர உதானய

பாட அறிவு புகட்டும் கருத்தரங்கு வேலைத்திட்டம்

எண்ணக்கரு

கௌரவ முதலமைச்சர்

சஷீந்திர ராஜபக்ஷ அவர்கள்

நிதி ஒதுக்கீட்டு அனுசரணை

ஊவா மாகாண கல்வி அமைச்சு

ஆலோசனை

L.L. அனில் விஜேசிரி

பிரதான அமைச்சின் செயலாளரும்
மாகாண கல்விச் செயலாளரும்

R.M. பியதாச ரட்னாயக

ஊவா மாகாண கல்விப் பணிப்பாளர்
ஊவா மாகாணம்

Y. கலையரசி

ஊவா மாகாண உதவிக் கல்விப் பணிப்பாளர்
ஊவா மாகாணம்

இணை ஏற்பாட்டு ஒழுங்கமைப்பு

N. சிவகுமார்

ஊவா மாகாண முதலமைச்சரின்
தமிழ் மொழி இணைப்பாளர்

ஏற்பாட்டு ஒழுங்கமைப்பு

ஜனக ஹேரத்

ஊவா மாகாண முதலமைச்சரின்
இணைப்புச் செயலாளர்
கல்வி வட்டாரம் மொனராகலை

சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய
சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய
சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய
சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய

சிப்சர உதானய செயலமர்வு

கல்விப் பொதுத் தராதர உயர் தரப் பரீட்சை 2013

வணிகக்கல்வி - 1

2 மணித்தியாலங்கள்

---

01) கீழ்வரும் அட்டவணையில் தேவைகளும், விருப்பங்களும் குறிப்பிடப்பட்டுள்ளது. இவற்றுக்கிடையிலான சரியான தொடர்பினை காட்டுகின்ற தொகுதி எது?

தேவைகள் (Needs)	விருப்பங்கள் (Wants)
1 - உணவு	A - பாடசாலை ஆசிரியர்கள்
2 - உடை	B - மருந்துகள்
3 - உறைவிடம்	C - சப்பாத்து
4 - கல்வி	D - சட்டைகள்
5 - சுகாதாரம்	E - மாடிவீடு

(1) 1 - A 2 - C 3 - B 4 - E 5 - D
(2) 1 - B 2 - C 3 - D 4 - A 5 - E
(3) 1 - D 2 - C 3 - C 4 - A 5 - B
(4) 1 - D 2 - E 3 - A 4 - C 5 - B
(5) 1 - C 2 - D 3 - E 4 - A 5 - B

(.....)

02) சூழல் பகுப்பாய்வின் மூலமாக அறிந்து கொள்ளப்பட்ட பலங்களும் (Strengths), சந்தர்ப்பங்களும் (Oppotunities) கீழ்வருமாறு,

(A) சாதகமான பொருளாதாரக் கொள்கைகள்
(B) சிறந்த தலைமைத்துவம்
(C) வணிகச்சார்புள்ள சட்டங்களும், விதிகளும்
(D) அமைதிச்சூழல்
(E) நிதி ரீதியான இயலுமை
(F) சிறந்த முகாமையாளர்கள்

இவற்றுள் சந்தர்ப்பங்களை மட்டும் குறிப்பிடும் தொகுதி எது?

(1) A, B, C (2) A, B, D (3) A, C, F
(4) A, C, D (5) A, D, E

(.....)

03) கீழே தரப்பட்டுள்ளவற்றுள் சமூகப் பொறுப்புக்கள் தொடர்பான சர்வதேசத் தரம் அல்லாதது எதுவாகும்,

(1) சூழல் முகாமைத்துவ நியமத்தரம் (Environment mgt standard)
(2) சமூக வகைகூறுதல் தரம் (Social Accountability Standard)
(3) ஹலால் சான்றிதழ் (Halal Certificate)
(4) வகைகூறுதல் தரம் (Accountability Standard)
(5) ஊழியர் பாதுகாப்பு தர முறைமை

(.....)

04) கீழே சில கடன் திட்டங்களும், அதனை வழங்கக்கூடிய நிதிநிறுவனங்களும் தரப்பட்டுள்ளது. இவற்றுக்கிடையான சரியான தொடர்பைக் காட்டுவது எது,

கடன் திட்டங்கள்	வழங்கும் நிறுவனங்கள்
1 - சுனாமி கடன்திட்டம்	A - அரச ஈட்டு முதலீட்டு வங்கி
2 - காந்தா ரண் திவிகம	B - ஹற்றன் நஷனல் வங்கி
3 - SEEDS	C - இலங்கை வங்கி
4 - திரிய	D - இலங்கை மத்திய வங்கி
5 - கமிபு பூதுவ	E - சர்வோதய அபிவிருத்தி வங்கி

(1) 1 - A 2 - C 3 - E 4 - B 5 - D
(2) 1 - B 2 - C 3 - E 4 - A 5 - D
(3) 1 - D 2 - C 3 - E 4 - A 5 - B
(4) 1 - C 2 - D 3 - E 4 - B 5 - A
(5) 1 - E 2 - B 3 - A 4 - C 5 - D

(.....)

05) கீழே ஒரு பங்காளர் தொடர்பான சில பண்புகள் தரப்பட்டுள்ளது.
(A) மூலதனத்தினை இடுதல்
(B) கடன் நிதி வழங்குதல்
(C) இலாபம் பெறுதல்
(D) வட்டியினைப் பெறுதல்
(E) வரையறுக்கப்படாத பொறுப்பு
(F) பொதுமக்களுக்கு பங்காளர் என அறியப்பட்டவர்
(G) முகாமையில் ஈடுபடுபவர்
(H) நட்டங்களில் பங்கெடுப்பவர்

மேலுள்ளவற்றில் போலிப்பங்காளர் (Quasi Partner) ஒருவருக்கு பொருந்தக்கூடியயை எவை?

(1) A, B, C, D (2) B, D, E, F (3) B, C, D, E
(4) C, D, E, F (5) C, D, E, H

(.....)

06) பின்வருவன வரையறுத்த சொந்தக்கம்பனிக்கும், பொதுக்கம்பனிக்கும் இடையிலான ஒற்றுமைகளும், வேறுபாடுகளுமாகும்.
(A) சட்டப்படி பதிவு கட்டாயமானது
(B) இழிவளவு இயக்குனர் தொகை
(C) உயர்ந்தளவு பங்குதாரர் எண்ணிக்கை
(D) வரையறுக்கப்படாத பொறுப்பு
(E) சட்ட ஆளுமை
(F) பங்கு பொது வழங்குதல்
(G) கணக்கு வைப்பும், கணக்க
(H) பங்கு கைமாற்றம் செய்தல்

மேலேயுள்ள காரணிகளில் இரு கம்பனிகளுக்குமிடையிலான வேறுபாடானவை எவை?
(1) A, B, C, F (2) A, C, E, F (3) C, E, F, G
(4) B, C, G, H (5) B, C, F, G

(.....)

07) கீழே அங்கீகார வணிகங்களின் வகைகளும், அதனுடன் தொடர்புடைய உதாரணங்களும் தரப்பட்டுள்ளது. அவற்றுக்கிடையிலான சரியான தொடர்பினைக் குறித்துக்காட்டும் தொகுதி எது?

அங்கீகார வணிக வகைகள்	உதாரணங்கள்
A - உற்பத்திப் பொருள் அங்கீகார வணிகம்	1 - Cocacola, Pepsi
B - உற்பத்தி முறை அங்கீகார வணிகம்	2 - KFC,PIZZA HUT
C - வணிக முறை அங்கீகார வணிகம்	3 - CeyPetCo, IOC

(1) A - 1 B - 2 C - 3
(2) A - 1 B - 3 C - 2
(3) A - 3 B - 2 C - 1
(4) A - 2 B - 1 C - 3
(5) A - 2 B - 3 C - 1

(.....)

08) இலங்கையில் சிறிய நடுத்தர முயற்சியாளர்களுக்கு பல்வேறு உதவிகளையும், ஊக்குவிப்புக்களையும் வழங்கி பொருளாதார அபிவிருத்தியினை மேம்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டுள்ள பிரதான நிறுவனம் எது?

(1) முயற்சியாண்மை அபிவிருத்தி வங்கி
(2) லங்கா புத்திர வங்கி
(3) தேசிய முயற்சியாண்மை அபிவிருத்தி அதிகார சபை
(4) இலங்கை சமூர்த்தி அதிகார சபை
(5) புத்தாக்க ஆணைக்குழு

(.....)

09) பணத்தின் தொழிற்பாடுகளை முதன்மைப் பணிகள், துணைப்பணிகள் என வகைப்படுத்த முடியும். அவை தொடர்பான சரியான தொடர்பினைக் காட்டும் தொகுதி எது?

(A) முதன்மைப் பணிகள்
(B) துணைப் பணிகள்
  (1) பிற்போடப்பட்ட கொடுப்பனவு சாதனம்
  (2) பரிமாற்றூடகம்
  (3) பெறுமதி அளவுகோல்
  (4) பெறுமானத்திரட்டு

(1) A - 2, 3 B - 1, 4 (2) A - 2, 1 B - 3, 4
(3) A - 1, 4 B - 2, 3 (4) A - 1, 3 B - 2, 4
(5) A - 3, 4 B - 1, 2

(.....)

10) கீழே இலங்கை மத்தியவங்கியின் குறிக்கோள்களும், பணிகளும் தரப்பட்டுள்ளது. இவற்றினைச் சரியாக அடையாளப்படுத்தும் தொகுதியினைத் தெரிவு செய்க.

(A) குறிக்கோள்கள்

(B) தொழிற்பாடுகள்

(1) பொதுப்படுகடனை முகாமை செய்தல்

(2) விலை உறுதி, பொருளாதார உறுதி பேணுதல்

(3) நிதி உறுதிநிலையினைப் பேணுதல்

(4) வெளிநாட்டு நாணயமாற்றுவிகித கட்டுப்பாடு

(1) A - 1, 3 B - 2, 4 (2) A - 2, 3 B - 1, 4

(3) A - 1, 2 B - 3, 4 (4) A - 4, 2 B - 1, 3

(5) A - 3, 4 B - 1, 2

(.....)

11) பின்வருவனவற்றுள் பொதுமுறை, சிறப்புமுறைக் குறுக்குக்கோடிடல் அல்லாதது,

(1) மக்கள் வங்கி (2) கைமாற்றத்தகாது

(3) இலங்கை வங்கி (4) பெறுவோன் கணக்கில் மட்டும்

(5) ரூபா 100000/- மட்டும்

(.....)

12) "காப்புறுதி என்பது அபாயங்களின் சேர்க்கை" (Pool of Risks) இக்கூற்றினை வலியுறுத்தக்கூடிய சரியான விடயம் எது?

(1) காப்புறுதி செய்யப்படும் ஒரு இழப்பானது பண ரீதியாக அளவிடக்கூடியதாக இருத்தல்.

(2) இழப்பினையும், நட்டத்தினையும் ஏற்படுத்தக்கூடியதாக இருத்தல்.

(3) காப்புறுதியாளர்கள் பலரால் செலுத்தப்பட்ட கட்டணங்களிலிருந்து ஒருவருக்கான நட்டஈடு வழங்கப்படல்.

(4) சொத்தொன்றினை பழைய நிலைக்கு கொண்டு வரக்கூடிய வகையில் நட்ட ஈட்டினை வழங்குதலாகும்.

(5) பல நிறுவனங்கள் நட்டத்தினைப் பகிர்ந்து ஏற்றுக்கொள்ளப்படுதலாகும்.

(.....)

13) கீழே போக்குவரத்து முறைகளும், தொடர்புடைய சில ஆவணங்களும் தரப்பட்டுள்ளது. இவற்றுக்கிடையிலான சரியான தொடர்பைக் காட்டுவது,

முறைகள்	ஆவணங்கள்
A - வீதிப்போக்குவரத்து	1 - வார் நாமம்
B - கடல் போக்குவரத்து	2 - பாதை அனுமதிப்பத்திரம்
C - ஆகாயப் போக்குவரத்து	3 - சுமைச்சீட்டு
D - புகையிரதப் போக்குவரத்து	4 - விமானமார்க்கச் சீட்டு

(1) A - 1 B - 2 C - 3 D - 4

(2) A - 2 B - 3 C - 4 D - 1

(3) A - 3 B - 4 C - 1 D - 2

(4) A - 4 B - 3 C - 2 D - 1

(5) A - 2 B - 4 C - 3 D - 1

(.....)

14) கீழே தொடர்பாடல் சாதனங்களும், அவை பயன்படுத்தப்படக்கூடிய சந்தர்ப்பங்களும் தரப்பட்டுள்ளது. சரியான தொடர்பினைக் காட்டுகின்ற தொகுதி எது?

(A) - கடிதம் (Letter)
(B) - கலந்துரையாடல் (Discussion)
(C) - கூட்டங்கள் (Meetings)
(D) - இன்டர்கொம் (Inter Com)

(1) நிறுவனமொன்றில் நிர்வாக ரீதியான தீர்மானங்களை மேற்கொள்ளுதல்.
(2) நியமனமொன்றினை ஒருவருக்கு அறிவித்தல்.
(3) பல்வேறு பகுதிகளை இணைத்துக்கொள்ளுதல்.
(4) நிறுவன விதிகள் தொடர்பாக பொதுவாக ஊழியர்களுக்கு அறிவித்தல்.

(1)	A - 1	B - 2	C - 3	D - 4
(2)	A - 2	B - 1	C - 4	D - 3
(3)	A - 3	B - 1	C - 2	D - 4
(4)	A - 4	B - 3	C - 2	D - 1
(5)	A - 2	B - 4	C - 1	D - 3

(.....)

15) ஒரு பொருளின் பெறுமதியில் குறிப்பிட்டளவு தொகையினை உடனடியாகச் செலுத்திய பின்னர் மீதியினை வட்டியுடன் பகுதி பகுதியாக செலுத்துவது எவ்வாறு அழைக்கப்படும்?

(1) பிற்போடப்பட்ட கொடுப்பனவு முறைமை
(2) வாடகைக் கொள்வனவு முறைமை
(3) தவணைமுறைக் கொடுப்பனவு முறைமை
(4) மேம்படுத்தல் வியாபார முறைமை
(5) தனிப்பட்ட வியாபார முறைமை

(.....)

16) ஒரு நாடு தன்னிடமுள்ள குறைவான வளங்களைப் பயன்படுத்தி அதிகளவு பொருட்களை குறைவான கிரயத்துடன் உற்பத்தி செய்து வேறொரு நாட்டினை விடவும் சிறப்பாகக் காணப்படுவது எவ்வாறு அழைக்கப்படும்?

(1) ஒப்பீட்டு அனுகூலக் கோட்பாடு (2) முழு அனுகூலக் கோட்பாடு
(3) போட்டி அனுகூலக் கோட்பாடு (4) வர்த்தகக் கோட்பாடு
(5) பொருளாதாரக் கொள்கை

(.....)

17) கீழே ஏற்றுமதி இறக்குமதி, வியாபாரத்துடன் தொடர்புடைய படிமுறைகள் தரப்பட்டுள்ளது,

(A) - கொள்வனவாளர்களை இனங்காணுதல்
(B) - கூறுவிலைக் கடிதம் அனுப்புதல்
(C) - வெளிநாட்டு வழங்குனர்களைக் கண்டறிதல்
(D) - இறக்குமதி அனுமதிப்பத்திரம் பெறுதல்
(E) - ஏற்றுமதிப் பொருட்களைத் தயார் செய்தல்
(F) - பணத்தினைப் பெறுதல்
(G) - தரவாணை அனுப்புதல்
(H) - நாணயக்கடிதம் அனுப்புதல்

மேலே தரப்பட்டவற்றுள் இறக்குமதியுடன் தொடர்புடைய நடைமுறைகளை மட்டும் தெரிவு செய்யும் தொகுதி எது?

(1) A, C, D, F (2) A, D, G, H (3) B, C, D, H
(4) C, G, F, H (5) C, D, G, H

(.....)

18) கீழே சிறந்த முகாமையாளர் தொடர்பான பண்புகள் தரப்பட்டுள்ளது. இவற்றுள் ஒரு சிறந்த முகாமையாளர் தொடர்பான பிரதான திறன்களாக எவற்றினைக் கருதமுடியுமென இனங்காட்டுக,

(A) - எண்ணக்கருத்திறன்
(B) - தீர்மானமெடுக்கும் திறன்
(C) - மானிடத்திறன்
(D) - நேர முகாமைத்துவத்திறன்
(E) - தொழில்நுட்பத்திறன்
(F) - விசேட திறன்
(G) - பூகோளத்திறன்
(H) - தொடர்பாடல் நுட்பத்திறன்

(1) A, B, C (2) D, E, F (3) F, G, H
(4) A, C, E (5) A, D, H

(.....)

(19) கீழேயுள்ள அட்டவணையில் ஊக்கவிப்பு முறைகளும் அதனுடன் தொடர்புடைய ஊதாரணங்களும் தரப்பட்டுள்ளது. அவற்றுக்கிடையிலான சரியான தொடர்புகளைக் காட்டும் தொகுதி எது?

(A) நிதிசார் ஊக்குவிபபுக்கள் (B) நிதிசாரா ஊக்குவிப்புக்கள்	(1) பயிற்சி அபிவிருத்தி (2) Bonus (3) சம்பளம் (4) தொழில் பாதுகாப்பு (5) நலன்புரி வசதிகள் (6) உபகாரப் பங்கு வழங்கல்

(1) A - 1, 2, 3 B - 4, 5, 6
(2) A - 2, 3, 6 B - 1, 4, 5
(3) A - 3, 4, 5 B - 1, 2, 6
(4) A - 4, 5, 6 B - 1, 2, 3
(5) A - 1, 3, 5 B - 2, 4, 6

(.....)

(20) உற்பத்தி நிறுவனமொன்றில் தரக்கட்டுப்பாடு மேற்கொள்ளப்படுகின்ற நுட்பங்கள் தொடர்பாக சரியான தொகுதி பின்வருவனவற்றுள் எது?

(1) உற்பத்திக்கட்டுப்பாடு/ தரப்பாதுகாப்புறுதி/ தரவட்டம்
(2) தரப்பாதுகாப்புறுதி/ இயந்திரக்கட்டுப்பாடு/ கிரயக்கட்டுப்பாடு
(3) தரப்பாதுகாப்புறுதி/ தரச்சுற்று/ தரமுகாமைத்துவம்
(4) தரம/ நியமத்தரம்/ மொத்த தரமுகாமைத்துவம்
(5) மொத்த தரமுகாமைத்துவம்/ பூச்சிய வழு முறைமை/ செய்முறைக்கட்டுப்பாடு

(.....)

(21) கிழே சில தகவல்கள் தரப்பட்டுள்ளது. இவற்றினை பயன்படுத்தி இலாப நட்டமற்ற புள்ளியினைக் காண்க

விற்பனை விலை - ரூ 40
மொத்த நிலையான கிரயம் - ரூ 24 000

மூலப்பொருள் கிரயம் (அலகிற்கு) - ரூ 16
கூலிக் கிரயம் (அலகிற்கு) - ரூ 12
உற்பத்தி அலகுகள் - 5 000
(1) 1000 அலகுகள்
(2) 2000 அலகுகள்
(3) 3000 அலகுகள்
(4) 4000 அலகுகள்
(5) 5000 அலகுகள்

(.....)

(22) கீழே இருப்பு தொடர்பான கிரயங்கள் தரப்பட்டுள்ளது. இவற்றினை கட்டளைக் கிரயம் , பேணும் கிரயம் என சரியாக தொகுதியாக்குவது எது?

கிரய வகைகள்	உதாரணங்கள்
(A) கட்டளைக் கிரயம் (ordering Cost) (B) பேணும் கிரயம் (Holding Cost)	(1) காப்புறுதிக் கட்டணம் (2) உட்சுமைக்கூலி (3) மேற்பார்வைச் செலவுகள் (4) பண்டகசாலைக் கட்டணம் (5) விரயங்கள், தேய்வுகள் (6) இறக்குதல் கட்டணம்

(1) A-1,3,4 B- 2,5,6
(2) A-1,2,4 B- 3,5,6
(3) A-3,5,6 B- 1,2,4
(4) A-2,4,6 B- 1,3,5
(5) A-2,3,6 B- 1,4,6

(.....)

(23) பின்வருவனவற்றின் மைய சந்தைப்படுத்தல் எண்ணக்கருவில் (core marketing concept)கூறுகளை சரியாக உள்ளடக்கியுள்ள தொகுதி எது?
(1) பொருள் எண்ணக்கரு/ பெறுமானம்,திருப்தி/பரிமாற்றம் கொடுக்கல் வாங்கல்
(2) பரிமாற்றம் கொடுக்கல் வாங்கல்/போட்டி/பொருள் எண்ணக்கரு
(3) சந்தைப்படுத்தல் வழிகள் / பெறுமானம்,திருப்தி/சந்தைப்படுத்தல்
(4) வாடிக்கையாளர்உறவுகள/வளங்கள் சங்கில/விற்பனை எண்ணக்கரு
(5) சந்தைப்படுத்தல் திட்டம்/ சந்தைப்படுத்தல் சூழல்/ வாடிக்கையாளர் எண்ணக்கரு

(.....)

(24) சந்தைப்படுத்தல் தொடர்பான சில தலைப்புக்களும் அவை தொடர்பான விளக்கங்களும் கீழே தரப்படடுள்ளது. சரியான தொடர்பினைக் காட்டும் தொகுதி எது?

(A) பரந்த சந்தைப்படுத்தல் (mass Marketting)	(1) உள்நாட்டு மக்களின் தேவை கருதி பொருட்களை அறிமுகப்படுத்தல்
(B) சந்தைத் துண்டமாக்கல் (Segmentated Marketing)	(2) தனிப்பட்ட நபர்களின் தேவைகளை பூர்த்தி செய்தல்
(C) சிறு சந்தை இடைவெளி (Niche Marketting)	(3) தனிப்பட்ட துண்டங்களை நோக்கி பொருட்களை வழங்குதல்
(D) உள்ளக சந்தைப்படுத்தல் (Local Marketting)	(4) புறக்கணிக்கப்பட்ட சந்தைகளை நோக்கி பொருட்களை வழங்குதல்
(E) வாடிக்கையாளர் திசைமுகப்படுத்தல் (Customization)	(5) பொதுவாக முழுமையான சந்தையை நோக்கி பொருட்களை வழங்குதல்

(1)	A-1	B- 2	C-3	D-4	E-5
(2)	A-2	B- 4	C-1	D-5	E-3
(3)	A-3	B- 1	C-4	D-2	E-5
(4)	A-5	B- 3	C-4	D-1	E-2
(5)	A-5	B- 4	C-3	D-2	E-1

(.....)

(25) கீழே மேம்படுத்தல் முறைகளும், கருவிகளும் தரப்பட்டுள்ளது. இவற்றுக்கிடையிலான சரியான தொடர்பினைக் காட்டும் தொகுதி எது?

மேம்படுத்தல் முறைகள்	கருவிகள்
(A) விற்பனை மேம்படுத்தல்	(1) கலை நிகழ்ச்சிகளை நடாத்துதல்
(B) விளம்பரப்படுத்தல்	(2) தபால் மூலம் விற்பனை
(C) பொது உறவுகள்	(3) பத்திரிகை விளம்பரங்கள்
(D) நிகழ்வுகள், அனுபவங்கள்	(4) காட்சிப்படுத்தல், செய்துகாட்டல்
(E) நேரடிச்சந்தைப்படுத்தல்	(5) அறநன்கொடைகள்

(1)	A-1	B- 2	C-3	D-4	E-5
(2)	A-2	B- 4	C-1	D-4	E-1
(3)	A-3	B- 5	C-2	D-4	E-5
(4)	A-4	B- 3	C-5	D-1	E-2
(5)	A-5	B- 4	C-3	D-2	E-1

(.....)

(26) கீழே உள்ளக , வெளியக நிதி மூலங்கள் தரப்பட்டள்ளது. இவற்றுள் வெளியக மூலங்களை மட்டும் குறித்துக்காட்டும் தொகுதி எது?

(A) வங்கிக் கடன்
(B) பகிரப்படாத லாபம்
(C) வணிகப்பத்திரம்
(D) பங்கு வழங்குதல்
(E) பெறுமானத்தேய்வு ஒதுக்கம்
(F) தொகுதிக்கடன் பத்திரம்
(G) ஐயக்கடன் ஏற்பாடுகள்
(H) நிலையான சொத்து விற்பனை

(1) A, C, D, F
(2) A, B, D, F
(3) B, C, D, E
(4) C, D, E, F
(5) D, E, F, H

(.....)

(27) கீழே தரப்பட்டுள்ள தகவல்களை பயன்படுத்தி நடைமுறை விகிதம், திரவ விகிதம் என்பவற்றைக் காண்க?

நடைமுறைச் சொத்துக்கள் - ரூ 80 000
நடைமுறை பொறுப்புக்கள் - ரூ 40 000
இருப்புக்கள் - ரூ 15 000
செலவு முற்பணங்கள் - ரூ 5 000

(1) 2, 3
(2) 2, 4
(3) 3, 4
(4) 4, 2
(5) 4, 3

(.....)

(28) பங்கு பரிவர்த்தனை தொடர்பான கொடுப்பனவுகள் தீர்ப்பனவுகளை மேற்கொள்ளும் நிறுவனம் எது?

(1) கொழும்பு பங்குப் பரிவர்த்தனை
(2) பிணைகள் பரிவர்த்தனை ஆணைச்சபை
(3) பங்குத்தரகுக் கம்பனிகள்
(4) மத்திய வைப்புத் திட்டக்கம்பனி
(5) கொழும்பு பிணைகள் பரிமாற்று ஆணைக்குழு

(.....)

(29) கீழே தரப்பட்ட இரு ஆவணங்கள் தொடர்பான சரியான உள்ளடக்கங்களை வெளிப்படுத்தும் தொகுதி எது?

(A) தொழில் நியமம்(Job Specification)
(B) தொழில் விபரணம்(Job Discription)

(1) கல்வித்தகைமைகள்
(2) பொது அறிவுத்திறன்
(3) வேலையின் பெயர்
(4) தொழில் அனுபவம்
(5) உரிமைகளும் கடமைகளும்
(6) மேற்பார்வையாளர்

(1)	A-2,4,5	B- 1,3,6
(2)	A-3,4,6	B- 1,2,5
(3)	A-2,3,5	B- 1,4,6
(4)	A-1,4,5	B- 2,3,6
(5)	A-1,2,4	B- 3,5,6

(.....)

(30) ஊழியர்களின் செயல்திறனை மதிப்பீடு செய்வதற்கான ஒரு கருவியாக எதனைக் கருத முடியாது?

(1) ஊழியர் புரள்வு
(2) ஊழியர் வரவின்மை
(3) தொழிலொப்பந்தம்
(4) ஊழியர் உற்பத்தித்திறன்
(5) தொழிலுறவு

(.....)

31 - 40 வரையான வினாக்களிற்கு வெற்றிடத்தில் மிகப் பொருத்தமான விடையினை எழுதுக

(31)(அ) இணையத்தினூடாக பொருட்களையும் சேவைகளையும் கொள்வனவு செய்தல் ..... என அழைக்கப்படும்.

(ஆ) இறக்குமதியாளரின் நிதியாற்றலை உறுதிசெய்யும் ஆவணம் ..... என்பதாகும்.

(32)(அ) வணிக நடவடிக்கைகள் மூலம் வணிகத்தினால் சமூகத்திற்கு திருப்பித்தரப்படவேண்டிய விடயங்கள் ..... எனவும், வணிகமொன்று சரியானதை செய்வதும், தவறான விடயங்களைத் தவிர்ப்பதும் ..... எனவும் அழைக்கப்படும்.

(ஆ) வருமானம் அதிகரிக்கும் போது வரிவீதம் அதிகரிக்கப்படுவது ..... எனவும், மாறாக வருமானம் அதிகரிக்கம் போது வரி வீதம் குறைவடைவது ..... எனவும் அழைக்கப்படும்.

(33)(அ) நபர்களுக்கிடையிலான பரஸ்பர நன்மைகருதி சுயாதீனமாக உருவாக்கப்படும் வணிக நிறுவனம் ..... என அழைக்கப்படும்.

(ஆ) ஒரு நிறுவனத்தின் பொருட்களை உற்பத்தி செய்யவும் , விற்பனை செய்யவும் உடன்படிக்கை அடிப்படையில் அனுமதி அளிக்கப்பட்டுள்ள நிறுவனவகை ..... என அழைக்கப்படும்.

(34)(அ) புத்தாக்கம், விசையினை ஏற்படுத்தல், அமுலாக்கம் , வளர்ச்சி என்பன ..... என அழைக்கப்படும்.

(ஆ) அரசதுறை நிறுவனங்களை தனியாரின் மூலதன, நிர்வாக பங்களிப்புடன் நிலைமாற்றம் செய்வது ..... என அழைக்கப்படும்.

(35)(அ) ..... நடைமுறை வைப்புக்களை ஏற்றல், வெளிநாட்டு செலாவணி கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுதல் போன்ற பணிகளில் ஈடுபடமுடியும்.

(ஆ) குறிப்பிட்ட நபர் மீண்டும் வேறொருவருக்கு உரிமை மாற்றமுடியாத வகையில் புறக்குறிப்பிடும் முறை ..... என அழைக்கப்படும்.

(36)(அ) போக்குவரத்து முறைமையின் அடிப்படைகளாக ..... , ... , ... , ... என்பன காணப்படுகிறது.

(ஆ) ..... , ... , ... என்பன தொடர்பாடல் மேற்கொள்ளப்படுகின்ற பிரதான முறைகளாகும்.

(37)(அ) இறக்குமதிப் பொருட்களை பிணையாக வைத்து வணிகவங்கி வழங்கக்கூடிய கடன்களை ..... என அழைக்கலாம்.

(ஆ) வதியாதோரால் சேமிப்பு தவணை வைப்புக்களாக ஆரம்பிக்கக்கூடிய கணக்கு ..... என அழைக்கப்படும்.

(38)(அ) ஏற்றுமதிகளின் பெறுமதிகளுக்கும், இறக்குமதிகளின் பெறுமதிகளுக்குமிடையிலான வித்தியாசம் ..... என அழைக்கப்படும்.

(ஆ) இறக்குமதியாளரிடமிருந்து கிடைக்க வேண்டிய பணம் தொடர்பான இழப்புக்களை ஈடு செய்யும் பொருட்டு ..... எனும் காப்புறுதி மேற்கொள்ளப்படும்.

(39)(அ) சந்தையிலுள்ள விலைகளை விடவும் குறைவான விலையில் விலையிடுவது ..... என கூறமுடியும்.

(ஆ) பங்குச் சந்தையினை சர்வதேச தரத்திற்கு உயர்த்தும் நோக்குடன் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள விலைச் சுட்டெண் ..... என அழைக்கப்படும்.

(40)(அ) நடைமுறைச் சொத்துக்களில் காணப்படுகின்ற முதலீடு ..... என அழைக்கப்படும்.

(ஆ) பங்குகளில் சந்தைப் பெறுமதி ..... என அழைக்கப்படும்.

41-50 வரையிலான வினாக்களிற்கு மிகவும் சரியான விடையினை எழுதுக

(41) வணிக அமைப்புக்களை பின்வரும் அடிப்படைகளில் வகைப்படுத்துக

உடைமை ரீதியாக	நோக்கத்தின் அடிப்படையில்
(1)	(3) .....
(2)	(4) .....

(42)(அ) SWOT ஆய்வினூடாக அறிந்து கொள்ளக்கூடிய விடயங்கள் எவை?

(1)	(3) .....
(2)	(4) .....

(ஆ) சமூகப் பொறுப்புக்கள் தொடர்பான சர்வதேச தர நியமங்கள் 2 தருக?

(1) .....

(2) .....

(43)(அ) முயற்சியாண்மை அபிவிருத்தி தொடர்பாக உருவாக்கப்பட்டுள்ள அரச நிறுவனங்கள் 2 தருக?

(1) .....

(2) .....

(ஆ) மேலுள்ள நிறுவனங்கள் எந்த அமைச்சின் கீழ் தொழிற்படுகின்றன?

.....

(44)(அ) வெளிநாடொன்றில் பதிவுசெய்யப்பட்டு இலங்கையில் வணிக முயற்சியிலீடுபடக்கூடிய கம்பனிகள் எவ்வாறு அழைக்கப்படும்?

.....

(ஆ) ஒரு ஆடைத் தொழிற்சாலை, வேறொரு ஆடைத் தொழிற்சாலையுடன் ஒருங்கிணைந்து கொள்வது எவ்வகையான இணைப்பாகும்?

.....

(45)(அ) வணிக வாய்ப்புக்களை இணங்காண்க?

(1)	(3) .....
(2)	(4) .....

(ஆ) ஓரலகு பணத்தினுடைய கொள்வனவு ஆற்றல் எவ்வாறு அழைக்கப்படும்?

.....

(46)(அ) ஆயுட் காப்புறுதிக் கட்டணம் செலுத்தமுடியாதபோது மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் எவை?

(1) .....

(2) .....

(ஆ) மோட்டார் வாகனமொன்றிற்கு ஏற்பட்ட உண்மையான இழப்பு மட்டுமே ஈடுசெய்யப்படும் எனக் குறிப்பிடப்படும் தத்துவம் யாது?

.....

(47)(அ) வேலைப்பகிர்வு அதிகாரக் கையளிப்பு, வள ஒதுக்கீடு போன்ற கருமங்களை உள்ளடக்கிய முகாமைத் தொழிற்பாடு எவ்வாறு அழைக்கப்படும்?

.....

(ஆ) அதிகாரக் கையளிப்பின் மூலம் அதிகாரத்தைப் பெற்றவர் அதனை வழங்கியவருக்கு பொறுப்பு கூறுதல் எவ்வாறு அழைக்கப்படும்?

.....

(48)(அ) கட்டளைக் கிரயம், பேணும் கிரயம் என்பவற்றினை இழிவுபடுத்துவதற்கான இருப்பு நுட்பங்கள் இரண்டு தருக?

(1) .....

(2) .....

(ஆ) பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி சம புள்ளியினைக் கணிக்கவும்

விற்பனை அலகு	8 000
விற்பனை வருமானம்	ரூ 96 000
மொத்த நிலையான கிரயம்	ரூ 48 000
மொத்த மாறும் கிரயம்	ரூ 64 000

.....

(49)(அ) வேலை, அதன் பொறுப்புக்கள் அதன் இலக்கு என்பனவற்றை நிர்ணயிப்பது எத்தகைய மனித வளப் பணியாகும்?

.....

(ஆ) தொழிலாளருக்கும், தொழில் தருணருக்குமிடையிலான சமூகமற்ற உறவு எவ்வாறு அறியப்படும்?

.....

(50)(அ) வணிகமொன்றின் ஊழியர்கள் விலகிச் செல்லுதல் எவ்வாறு அழைக்கப்படும்?

.....

(ஆ) தொழில் பிணக்கினை தீர்ப்பதற்காக தொழிலாளர் பிரதிநிதிகளும் , தொழில் தருநர் பிரதிநிதிகளும் பேச்சுவார்த்தை செய்தல் எவ்வாறு அழைக்கப்படும்?

.....

சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய

(iv) கீழே "SWOT" வரிப்படம் காட்டப்பட்டுள்ளது.

Strengths	Weakness	
S & O	W & O	Opportunities
S & T	W & T	Threats

மேலுள்ள ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் வணிகமொன்று எதிர்நோக்கக்கூடிய விளைவுகளையும், மாற்றுவழிகளையும் இனங்காண்க.

(v) "தற்காலத்தில் புலமைச் சொத்துக்கள் (Intellectual Properties) சட்டபூர்வமற்ற முறையில் பயன்படுத்தப்படுவதனை அதிகளவில் அவதானிக்கமுடியும்"

a) புலமைச் சொத்துக்கள் சட்டப்படி இவை தவறாகப் பயன்படுத்தப்படுவதனைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகள் எவை?

b) புலமைச் சொத்துக்கள் தொடர்பாக வணிகமொன்றின் சமூகப்பொறுப்புக்கள் எவையெனக் குறிப்பிடுக.

(5 x 4=20புள்ளி)

02) இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி உறுதி தொடர்பாக இலங்கை மத்தியவங்கி பல்வேறுபட்ட கொள்கைகளைக் கொண்டிருக்கின்றது. இவை நாணயக்கொள்கை (Money Policy), இறைக்கொள்கை (Fiscal Policy) என அடையாளப்படுத்தப்படுகின்றது.

(i) a) பணநிரம்பலைக் கட்டுப்படுத்துவதற்காக இலங்கை மத்தியவங்கி பயன்படுத்துகின்ற கருவிகளைக் குறிப்பிட்டு விளக்குக.

b) அரசாங்க வருமானங்களைப் பல நிறுவனங்கள் திரட்டிக் கொடுக்கின்றது. அவற்றினையும் அவ்வருமான மூலங்களையும் குறிப்பிடுக.

(ii) சர்வதேச நுகர்வோர் ஒழுங்கமைப்பின் மூலம் முன்மொழியப்பட்டுள்ள நுகர்வோர் உரிமைகளைக் குறிப்பிட்டு விளக்குக.

(iii) a) பங்குடமை வணிகமொன்றின் சிறப்புப் பண்புகளைக் குறிப்பிடுக.

b) "ஏனைய வகையான வணிக அமைப்புக்களுடன் ஒப்பிடுகின்ற போது பங்குடமை வணிகத்தின் பிரபல்யம் இன்று குறைவடைந்து வருகின்றது எனலாம்" இக்கூற்றினை விளக்குக.

(iv) a) கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றின் அங்கத்தவர்களின் வாக்குரிமையினை நிர்ணயிக்கக்கூடிய சட்டபூர்வமான காரணியினை இனங்கண்டு விளக்குக.

b) "கம்பனிகள் பதிவாளருக்கு கம்பனியொன்றின் கணக்காய்வாளரை நியமிக்கும் அதிகாரம் கிடையாது" இக்கூற்றின் உண்மைத்தன்மையினை விளக்குக.

(v) a) அங்கீகார வணிகங்கள் (Franchise Business) தற்காலத்தில் பல்வேறு பிரிவுகளாக உருவாக்கப்படுகிறது. அவற்றினைக் குறிப்பிட்டு விளக்குக.

b) தனியார் மயமாக்கல் (Privatization) ஒரு காலத்தில் மிக அதிகளவில் மேற்கொள்ளப்பட்டது. அதற்குச் சார்பான, எதிரான கருத்துக்களை முன்வைக்க.

(5 x 4=20புள்ளிகள்)

03) முயற்சியாளர்கள் சந்தையில் காணப்படுகின்ற சந்தர்ப்பங்களை இனங்கண்டு அதனைப் புத்தாக்க எண்ணங்களாக நிலைமாற்றம் செய்து, அபாயங்களை எதிர்கொண்டு, மக்களின் தேவைகள், விருப்பங்களைப் பூர்த்தி செய்கின்றனர்.

(i) முயற்சியாளர்கள் எவ்வாறு சந்தர்ப்பங்களை இனங்கண்டு எண்ணங்களை உருவாக்கிக் கொள்கின்றனர் என்ற முயற்சியாண்மைச் செயன்முறையினைக் குறிப்பிட்டு விளக்குக.

(ii) a) முயற்சியாண்மையின் பல்வேறு வகைகளைக் குறிப்பிட்டு விளக்குக.
b) வெற்றிகரமான முயற்சியாண்மை ஒன்றினை உருவாக்குவதற்கு அவசியமான அடிப்படைக் காரணிகளைக் குறிப்பிடுக.

(iii) சிறிய நடுத்தரக் கைத்தொழில்களை அரசாங்கம் ஊக்கப்படுத்துவதற்கான காரணங்களைக் கண்டறிக.

(iv) "வங்கிகளும், நிதிநிறுவனங்களும் இலங்கையின் பொருளாதார மற்றும் நிதிமுறைமையில் மிகச் சிறப்பான செயற்பாடுகளை ஆற்றுகின்றன.
a) பத்திரங்களற்ற பிணைகள் தீர்ப்பனவு முறையின் (SSSS) அனுகூலங்களைக் குறிப்பிடுக.
b) இரண்டாந்தரச் சந்தையின் SSSS மூலம் எவ்வகையான கொடுக்கல் வாங்கல் இடம்பெறுகின்றது?

(v) "கடனட்டைகள், வரவட்டைகள் மூலமாக இலத்திரனியல் பணக்கொடுப்பனவுகள் தற்காலத்தில் அதிகரித்துள்ளது"
a) கடனட்டைகள், வரவட்டைகளைப் பயன்படுத்துவதன் அனுகூலங்களைத் தனித்தனியாகத் தருக.
b) பொதுமுறைக் குறுக்குக்கோடிடல், சிறப்புமுறைக் குறுக்குக்கோடிடல் என்பவற்றைக் குறிப்பிட்டு எவ்வாறு பணமாக்க முடியுமெனவும் விளக்குக.

(5x 4=20புள்ளிகள்)

04) திரு. சந்தோஷ் என்பவர் இவ்வாண்டின் ஆரம்பத்தில் ஒரு ஆடைத்தொழிற்சாலையொன்றினை ஆரம்பித்துள்ளார். இதற்கென கட்டிடமொன்றினை வாடகைக்கு எடுத்திருப்பதுடன், தனது 1400000 ரூபா பெறுமதிமிக்க மோட்டார் வாகனமொன்றினையும் வியாபாரத்தேவையில் பயன்படுத்துகிறார். வியாபாரம் எதிர்நோக்கக்கூடிய அபாயங்களுக்கான காப்புறுதி ஒன்றினையும், தனது ஆயுளிற்கும் காப்புறுதிப் பத்திரமொன்றினையும் பெற்றுள்ளார்.

(i) கீழ்வரும் காப்புறுதிக் கொள்கைகளை மேலுள்ள விடயத்துடன் தொடர்புபடுத்தி விளக்குக.
a) காப்புறுதி செய்தகு நலன் (Insurable Internet)
b) மிக்குயர் நம்பிக்கை (Ut most good faith)
c) இழப்பீட்டுத்தத்துவம் (Indemnity)
d) அண்மைக்காரணம் (Proximate)

(ii) a) விவசாயக் காப்புறுதிச் சபையின் (Agriculture Insurance Board) பணிகளைக் குறிப்பிடுக.
b) இலங்கையின் காப்புறுதிச் சந்தையுடன் தொடர்புடைய தரப்பினர்களை இனங்கண்டு விளக்குக.

(iii) காப்புறுதியுடன் தொடர்புடைய சட்டத்தன்மைகளை குறிப்பிடுவதுடன் அதன் மூலம் வணிகத்திற்கு கிடைக்கக்கூடிய அனுகூலங்களைத் தருக.

(iv) a) நாட்டின் போக்குவரத்து அபிவிருத்தியுடன் தொடர்புடைய அடிப்படைகளைக் குறிப்பிட்டு விளக்குக.
b) போக்குவரத்து வணிகமொன்றுடன் தொடர்புடைய சட்டச்சூழல் காரணிகளைக் குறிப்பிட்டு விளக்குக.

(v) பின்வரும் எண்ணக்கருக்களை விளக்குக.
a) மீள்காப்புறுதி - இரட்டைக்காப்புறுதி
(Re - Insurance) - (Dual Insurance)
b) மீள்கொள்வனவு வீதம் - நேர்மாற்று மீள்கொள்வனவு வீதம்
(Repo Rate) - (Reverse Repo Rate)

(5x 4=20புள்ளிகள்)

பகுதி – 'ஆ'

05)

(i) ஜெயம் என்பவர் தனது பிரதேசத்தில் நவீன வசதிகளுடன் கூடிய ஒரு சில்லறை வியாபாரமொன்றினை ஆரம்பிக்க விரும்புகிறார். எனவே இன்றைய சில்லறை வியாபாரமொன்றின் நவீன போக்குகள் என நீர் எவற்றைக் கருத்திற்கொள்ள வேண்டுமெனக் குறிப்பிட்டு விளக்குக.

(ii) உலக வியாபார ஒழுங்கமைப்பு (World Trade Organization) சர்வதேச வியாபார அபிவிருத்தியில் பல்வேறு முக்கிய பங்களிப்பினை நல்கி வருகின்றது. இதன் மூலம் பல்வேறு வியாபாரத்தடைகள் நீக்கப்பட்டு வருகிறது.

a) சர்வதேச வியாபாரத்தடைகள் (Global Trade Barriers) என்பதனை விளக்குக.
b) W.T.O வின் பிரதான பணிகளைக் குறிப்பிடுக.

(iii) "வணிகமொன்றின் வெற்றியானது சிறந்த திட்டமிடலில் தங்கியுள்ளது"

a) திட்டமிடலின் அனுகூலங்களைக் குறிப்பிட்டு விளக்குக.
b) திட்டமிடலுடன் தொடர்புடைய தத்துவங்களை இனங்காண்க.

(iv) ஒழுங்கமைப்பொன்றில் விரிந்த, ஒடுங்கிய விசால அளவுகளைக் காணமுடியும். இவ் ஒவ்வொன்றிலும் காணப்படும் அனுகூலங்களையும், பிரதிகூலங்களையும் குறிப்பிடுக.

(v) "முகாமைத்துவத்தில் கட்டுப்படுத்தல் மிகவும் முக்கியமான செய்முறையாகும்" பல்வேறு கட்டுப்பாட்டு முறைகளைக் குறிப்பிட்டு அவை எவ்வாறு வணிகத்தின் மீது பிரயோகிக்க முடியம் என விளக்குக.

(5x 4=20புள்ளிகள்)

06)

(i) வணிக முகாமைத்துவத்தில் வினைத்திறனும் (Effeciency), செயல்திறனும் (Effectiveness) எவ்வாறு பங்களிப்புச் செய்யமுடியும் என விளக்குக.

(ii) சந்தை நிலைமைகளைப் பற்றி அறிந்து கொள்வதற்கு ஆராட்சியும் அபிவிருத்தியும் மேற்கொள்ளப்பட வேண்டியது இன்று மிகவும் அவசியமானதாக அமைகிறது.

a) ஆராட்சி அபிவிருத்திப் பகுதியின் மூலம் மேற்கொள்ளப்படவேண்டிய கருமங்கள் எவை?
b) ஆராட்சி அபிவிருத்தியில் ஈடுபடுவதன் மூலமாக ஒரு வணிக முயற்சியாளன் பெறக்கூடிய நன்மைகள் எவை?

(iii) உற்பத்தி முறைமைகளை (Production Methods) குறிப்பிட்டு உதாரணத்துடன் விளக்குக.

(iv) உற்பத்திப்பொருள் தளவமைப்பு (Product Layout), செய்முறைத் தளவமைப்பு (Process Layout) என்பவற்றை ஒரு வணிக நிறுவனத்தில் எவ்வாறு செயற்படுத்த முடியும் என்பதனை விளக்குக.

(v) a) கீழே தரப்பட்ட தகவல்கள் ஒரு புத்தக உற்பத்தி நிறுவனம் தொடர்பானவையாகும்.

வருடாந்த கேள்வி	1000 அலகுகள்
ஒரு கட்டளைக்கான கிரயம்	ரூ 50
ஒரு அலகினைப் பேணும் கிரயம்	ரூ 10

சிக்கனக் கட்டளைக் கணியம் (EOQ) யாது?

b) உற்பத்தியின் தரத்தினை மேம்படுத்துவதற்காக ஒரு வணிக நிறுவனம் பயன்படுத்தக்கூடிய முறைகளையும், நுட்பங்களையும் குறிப்பிடுக.

(5 x 4=20புள்ளிகள்)

07)

(i) "விழிப்புணர்வுள்ள நுகர்வோர் தொகை அதிகரித்து வருவது இன்றைய வணிகச்சூழலின் புதிய போக்காகும்"

a) இன்றைய நுகர்வோரிடத்திலுள்ள பலமான விடயங்களாக நீர் எதனைக் கருதுகிறீர்?

b) சந்தைப்படுத்தலின் மைய எண்ணக்கருக்களைக் குறிப்பிட்டு விளக்குக.

(ii) பின்வரும் விடயங்களை விளக்குக.

a) மறை கேள்வி (Negative Demand) - கேள்வியின்மை (No Demand)

b) இலக்குச் சந்தை - சந்தை துண்டமாக்கல்
(Target Market) - (Market Segmentation)

(iii) நுகர்வோரது தேவைகள், விருப்பங்களைப் பூர்த்தி செய்வது தொடர்பாக பொருள்சார் மட்டங்களைக் குறிப்பிட்டு விளக்குக.

(iv) a) கீழ்வரும் சந்தைப்படுத்தல் எண்ணக்கருக்கள் ஒவ்வொன்றும் எத்தகைய பரப்புக்களின் மீது கவனம் செலுத்துகிறது என இனங்காண்க.
உற்பத்தி எண்ணக்கரு (Production Concept)
பொருள் எண்ணக்கரு (Product Concept)
விற்பனை எண்ணக்கரு (Selling Concept)
சந்தைப்படுத்தல் எண்ணக்கரு (Marketing Concept)

b) வாடிக்கையாளர் எண்ணக்கருவிற்கும் (Customer Concept), சமுதாய சந்தைப்படுத்தல் எண்ணக்கருவிற்கும் (Social Marketing Concept) இடையிலான தொடர்பினை விளக்குக.

(v) a) நுகர்வோர் நோக்கிய விற்பனை மேம்படுத்தலையும் (Consumer Promotion), வியாபாரி நோக்கிய விற்பனை மேம்படுத்தலையும் (Trade Promotion) ஒப்பிட்டு விளக்குக.

b) பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி கீழ்வரும் வினாக்களிற்கு விடையளிக்க.

நேரில் மூலப்பொருள் கிரயம்	ரூ 20000
நேரில் கூலிகள்	ரூ 30000
நேரில் செலவுகள்	ரூ 30000
நிலையான கிரயம்	ரூ 20000
இலாப எல்லை	15%
உற்பத்தி அலகுகள்	5000

(I) அலகிற்கான மாறும் கிரயம் எவ்வளவு?

(II) அலகுக்கிரயம் எவ்வளவு?

(III) கிரயமும் இலாபமும் விலை எவ்வளவு?

(IV) இலக்கு திரும்பல் விலை எவ்வளவு?

(5x 4=20புள்ளிகள்)

08) "வணிக நிறுவனங்களின் சுமூகமான செயற்பாட்டிற்கு மிகச்சிறந்த நிதிமுகாமைத்துவம் அவசியமாகும்"

(i) a) வணிகமொன்றின் தொழிற்படு மூலதனத்தினுள் உள்ளடக்கப்படக்கூடிய விடயங்களைக் கண்டறிக.

b) வணிகத்தின் நிதிமூலங்களை உதாரணத்துடன் பாகுபாடு செய்க.

(ii) a) நிதிமுகாமையாளரொருவர் முதலீட்டுத் தீர்மானத்தினை மேற்கொள்ளும் போது கருத்திற் கொள்ள வேண்டிய பிரதான காரணிகளையும், பொருத்தமான முதலீட்டு வாய்ப்புக்களையும் குறிப்பிடுக.

b) நீண்டகால நிதி மூலங்களை (Long Term Finance) இனங்காண்க.

(iii) a) நம்பிக்கை அலகுகள் (Unit Trast) ஒரு பாதுகாப்பான முதலீடாக இருப்பதற்கு சாதகமான காரணங்களைக் கண்டறிக.

b) கொழும்பு பங்குப் பரிவர்த்தனை தொடர்பான தகவல்களைப் பெறக்கூடிய மூலங்களைக் குறிப்பிடுக.

(iv) "மக்களைப் பயன்படுத்தியும், கட்டுப்படுத்தியும் வேலைகளைச் செய்விப்பது மனிதவள முகாமை என்பது இன்று ஏற்புடைய கோட்பாடு அல்ல" மனிதவளம் ஒரு கௌரவமான வளம் எனக் கருதவேண்டிய தேவையுள்ளது.

a) மனிதவள முகாமையின் நோக்கங்களைக் கண்டறிக.

b) ஏனைய உற்பத்திக்காரணிகளை விடவும் மனிதவளம் முக்கியத்துவமுடையதாகக் கருதப்படுவதற்கான காரணங்கள் எவை?

(v) a) ஊழியர்கள் தொடர்பான சாதனை மதிப்பிடலின் அனுகூலங்களை நிறுவனம், ஊழியர் தொடர்பாக இனங்காண்க.

b) ஊழியர்களினால் தொழிற்சங்கமொன்றினை உருவாக்குவது தொடர்பாக கவனத்தில் கொள்ள வேண்டிய காரணிகளைக் கண்டறிக.

(5x 4=20புள்ளிகள்)

சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய

5. பொருத்தமான கூற்றைத் தெரிவு செய்க

அ. களனி கங்கை, கலாவாவி என்பவை நிலம் என்னும் காரணியில் உள்ளடக்கப்படும்

ஆ, உள்ளீட்டு வெளியீட்டு அலகுகளின் அதிகரிப்பு விகிதாசாரத்திற்கு சமனான விகிதத்தில் உற்பத்தி அதிகரிக்கின்றது,

இ. பயன்படுத்தப்படாத நிலங்கள் காணப்படுதல் நாட்டின் அருமைத் தன்மை உள்ளனவையாக அவற்றை கருத முடியாது.

ஈ. ஒரு ஊழியத்தின் நோக்கம் மனித மூலதனத்தை உருவாக்குவது.

உ. சமூகப் பொதுப்பணி மூலதனம் என்பதன் கருத்து ஒரு நாட்டின் குறித்த நேரத்தில் காணப்படும் இருப்புக்கள் பொதுப்பணிகள் ஆகும்

6. சந்தைப் பொருளாதாரத்தில் "எவ்வாறு உற்பத்தி செய்தல்" என்னும் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சனை தீர்க்கப்படுவது.

அ. குறைந்த செலவினையுடைய காரணிச்செறிவைப் பயன்படுத்துவதன் மூலம் தீர்க்கப்படுகிறது.

ஆ. பண்டங்களின் சார்பு விலைகளின் அடிப்படையில் தீர்க்கப்படுகிறது.

இ. விலை குறைந்த பண்டங்களை அதிகமாக உற்பத்தி செய்வதன் மூலமும் விலை கூடிய பண்டங்களை குறைவாக உற்பத்தி செய்வதன் மூலமும் தீர்க்கப்படுகின்றது.

ஈ. கூடிய அமையச் செலவுடைய பண்டங்களை அதிகமாக உற்பத்தி செய்வதன் மூலமும் குறைவான அமையச் செலவுடைய பண்டங்களை குறைவாக உற்பத்தி செய்வதன் மூலமும் தீர்க்கப்படுகிறது.

உ. மூலதன ஊக்குவிப்பு முறையைப் பயன்படுத்துவதன் மூலம் தீர்க்கப்படுகிறது.

07. கலப்புப் பொருளாதாரம் ஒன்றில் காரணிச்சந்தையின் பங்கு யாது?

அ. நுகர்வோரிற்கு வரியும் மானியமும் வழங்குதல்

ஆ, அரசு பண்டங்கள் சேவைகளைக் கொள்வனவு செய்தல்.

இ. குறைந்த சம்பளத்தில் சட்டங்களையும் ஒழுங்குகளையும் அமுல்படுத்துதல்

ஈ. வீட்டுத்துறையினருக்கு வரிவிதிக்கப்படுதல்

உ. பொதுவான சட்டங்கள் விதிமுறைகளை ஒழுங்குபடுத்துதல்.

08. உற்பத்தி சாத்திய வளையி தொடர்பாக உடன்படாத கூற்று எது?

அ. உற்பத்தி சாத்திய வளையியின் எந்த ஒரு புள்ளியிலும் உயர்வான உற்பத்தி செயற்றிறன் காணப்படும்.

ஆ, அமையச் செலவு வீத நடத்தையை அடிப்படையாகக் கொண்டே உற்பத்தி சாத்திய வளையியின் வடிவம் தீர்மானிக்கப்படும்.

இ. ஒரு நாட்டின் வளங்கள் அனைத்தும் வேலையின்மை நிலையில் காணப்படுமாயின் உற்பத்தி சாத்திய வளையியை வரைவது சாத்தியமில்லை.

ஈ. உற்பத்தியில் அதிகரிப்பு காணப்படுமாயின் மாத்திரமே உற்பத்தி சாத்திய வளையி வலப்புறம் நகரும்

உ. வளையியின் எல்லாப் புள்ளிகளிலும் பொருளாதார வினைத்திறன் காணப்படுவதில்லை.

09. கேள்வி விதி தொடர்பான நடத்தையை விளக்காதது எது?

அ. கிபன் பண்டங்களுக்கான கேள்வி

ஆ, அதிக விலையுடைய ஆடம்பரப் பண்டங்களின் கேள்வி

இ. விலையின் மூலம் பண்டங்களின் தரம் நிர்ணயிக்கப்படுவதற்கான கேள்வி

ஈ. புராதனப் பண்டங்களிற்கான கேள்வி

உ. இழிவுப் பண்டங்களுக்கான கேள்வி

10. கடந்த பத்து வருடங்களின் கணனிகளின் விலைகள் வேகமாக வீழ்ச்சியடைந்தன. ஆனால் கணனியின் நிரம்பல் அதிகரித்துக் காணப்படுகிறது. பின்வரும் காரணிகள் எதன் விளைவாக இருக்க முடியாது.

அ. கணணி உற்பத்தியில் தொழினுட்ப அபிவிருத்தி காணப்படுதல்


ஆ, கணனியின் விலைகளில் திடீர் அதிகரிப்பு காணப்படுதல்

இ. கணனி உற்பத்தியின பகுதிப் பொருள்களின் (Parts) விலைகள் அதிகரித்துக் காணப்படுதல்

ஈ. கணனி உற்பத்திகளுக்கு வரி விடுதலை அளித்தல்

உ. கணனி உற்பத்திகளுக்கான மானியம் பெற்றுக் கொள்ளல்.

11.



விலை சார் கேள்வி நெகிழ்ச்சி தொடர்பான கூற்றை வெளிப்படுத்தும் சரியான கூற்று

அ. வெளியீட்டு அதிகரிப்பு நெகிழ்ச்சி அதிகரிப்பிற்கு இடடுச்செல்கின்றது.

ஆ. வெளியீட்டு அதிகரிப்பு நெகிழ்ச்சியின் வீழ்ச்சிக்கு இட்டுச் செல்கின்றது.

இ. எந்த ஒரு வெளியீட்டிலும் ஒன்றிற்கு சமனான நெகிழ்ச்சி காணப்படும்

ஈ. நெகிழ்ச்சி என்பது நெகிழும் தன்மையுடையது,

உ. எல்லா வெளியீட்டு மட்டத்திலும் நெகிழ்ச்சியானது நெகிழ்வுடையதாகவும் நிலையாகவும் காணப்படும்.

12 குறித்த பண்டம் ஒன்றின் நிரம்பல் சமன்பாடு $\frac{\triangle Qd}{\triangle P}$ பின்வருமாறு

$Qs=100+10P$

பண்டத்தின் விலை குறைகின்ற போது ஒவ்வொரு விலைக்கும் நிரம்பல் 20 % ஆல் அதிகரிக்கிறது. சரியான நிரம்பல் சமன்பாட்டை இனங்காண்க.

அ. $Qs=100+10P$

ஆ. $Qs=120+10P$

இ. $Qs=100+12P$

ஈ. $Qs=120=12P$

உ. $Qs=-120+12P$

13. விலை சார் கேள்வி நெகிழ்ச்சிக் குணகம் படிப்படியாக அதிகரித்து கேள்வி வளையியல் கீழ் நோக்கி சரிந்து செல்வதற்கான காரணம்

அ. ஒன்றிற்கு குறைந்த கேள்வி நெகிழ்ச்சியுடைய பண்டம்

ஆ. P/Qd தொடர்ந்து நிலையாக இருக்கும் போது $\frac{\triangle Qd}{\triangle P}$ அதிகரிக்கும்

இ. $\frac{\triangle Qd}{\triangle P}$ தொடர்ந்து நிலையாக இருக்கும் போது p/Qd படிப்படியாக வீழ்ச்சியடைதல்

ஈ. விலைக்கும் கேள்விக்குமிடையில் எதிரிடையான தொடர்பு காணப்படுதல்.

உ. $\frac{\triangle Qd}{\triangle P}$ தொடர்ந்து நிலையாக இருக்கும் போது விலை அதிகரித்து கேள்வித்தொகை குறைவடைகின்றது,


14. குறித்த பண்டம் ஒன்றிற்கான நிரம்பல் சமன்பாடு மிகைக் கேள்விச் சமன்பாடு என்பவை பின்வருமாறு

Qs=-50+3p
Ed=150-5p

கேள்விச் சமன்பாடு மிகை நிரம்பல் சமன்பாடு என்பவை முறையே

	கேள்விச் சமன்பாடு	மிகை நிரம்பல் சமன்பாடு
அ.	100-2p	-150+5p
ஆ.	-100+2p	-150+5p
இ.	-50+3p	150+5p
ஈ.	-150-5p	50+3p
உ.	100-2p	150+5p

15. இரு கேள்வி வளையிகள் E என்ற புள்ளியின் சந்திப்பதனை பின்வரும் வரைபடம் காட்டுகிறது.



E ப் புள்ளியில் D1 கோட்டினதும் DII கோட்டினதும் நெகிழ்ச்சியின் பெறுமதி

	நெகிழ்ச்சி D1	நெகிழ்ச்சி DII
அ.	-1.5	0
ஆ.	-1.5	2
இ.	-1.5	3
ஈ.	-1.5	-1.05
உ.	.5	-2.5

16. மிகை வரிச்சுமை என்பதன் கருத்து யாது

அ. அரச வரி வருமானத்திலிருந்து நுகர்வோன் மொத்த மிகை இழப்பைக் கழிப்பதன் மூலம் கணிக்கப்படுகிறது.

ஆ. வரி காரணமாக ஏற்படும் நுகர்வோர் மிகை இழப்பு

இ. வரி காரணமாக ஏற்படும் உற்பத்தியாளர் மிகை இழப்பு

ஈ. வரி காரண்மாக ஏற்படும் மொத்த நுகர்வோர் மிகை இழப்பும் உற்பத்தியாளர் மிகை இழப்பும்

உ. வரி காரணமாக ஏற்படும் பொருளாதார மிகை இழப்பு

17. வெளியீடு 20 அலகுகளாக இருக்கும் போது சராசரி மாறும் செலவு 20ரூபா
மொத்த செலவு 500ரூபா

வெளியீடு 40 அலகுகளாக அதிகரிக்கும் போது எல்லைச்செலவு 10ரூபா ஆகும். 40 அலகு வெளியீட்டின் போது சராசரி மாறும் செலவு யாது?

அ. 20/=

ஆ. 17. 50 /=

இ. 10/=

ஈ. 12.50/=

உ. 15.00/=

18. நிறை போட்டிச் சந்தையின் பண்பு அல்லாதது

அ. நிறுவனம் விலை ஏற்போனாக இருத்தல்

ஆ, நீண்ட காலத்தில் பொருளியல் இலாபம் காணப்படும்

இ. எல்லா நிறுவனங்களினதும் எல்லை வருமானம் விலைக்கு சமனாக காணப்படும்

ஈ. எல்லா நிறுவனங்களும் பூரண கேள்வி நெகிழ்ச்சி உடையதாக காணப்படும்

உ. கீழ் நோக்கிய சரிவுடைய சந்தைக்கேள்வி வளையி காணப்படும்

19. செலவு முறையை அடிப்படையாகக் கொண்டு மொத்தத் தேசிய உற்பத்தி கணிப்பிடப்படுவது பின்வருவனவற்றில் எது?

அ. நுகர்வுச்செலவு + முதலீட்டுச் செலவு + தேறிய காரணி வருமானம்

ஆ, மொத்த உள்நாட்டுச் செலவு + தேறிய காரணி வருமானம்

இ. மொத்த உள்நாட்டு செலவு + தேறிய ஏற்றுமதி

ஈ. மொத்த உள்நாட்டுச் செலவு + நடைமுறைக் கணக்கு மீதி (சென்மதி நிலுவைக் கணக்கின்)

உ. மொத்த உள்நாட்டு செலவு + பண்டங்கள் சேவைகள் கணக்கு மீதி (நடைமுறைக் கணக்கு மீதியின்)

20. செலவு முறையினுள் அடங்குவதை தெரிவு செய்க.

அ. அரச சமூர்த்திச் செலவு

ஆ, அரச கடன்களின் வட்டிச்செலவு

இ. அரசின் கல்வி, சுகாதாரம் தொடர்பான செலவு

ஈ. பாவித்த மோட்டார் வாகன மீள் கொள்வனவு

உ. வியாபாரி தொழிலாளர்களுக்கு செலுத்தும் கூலி

21. எளிய பொருளாதார மாதிரி ஒன்றின் C=10+0.8yd வருமானம் அதிகரித்தால் mpc,Apc தொடர்பான சரியான கூற்றை இனங்காண்க

அ. mpc உம் Apc உம் குறைவடைந்து செல்லும்

ஆ. Mpc யின் பெறுமதி நேர்க்கணியமாகவும் Apc யின் பெறுமதி எதிர்க்கணியமாகவும் காணப்படும்

இ. Mpc அதிகரித்துச் செல்வதுடன் Apc நிலையாக இருக்கும்

ஈ. Mpc உம் Apc உம் அதிகரித்துச் செல்லும்

உ. Mpc உம் Apc உம் நிலையாக இருக்கும்

22. ஒரு நாட்டின் பொருளாதாரத்தின் உண்மைத் தேசிய உற்பத்தி 0.75 ஆகக் குறைவடைந்து செல்லுமாயின் அவ் வருடத்திற்கான மொத்த உள்நாட்டு உற்பத்தி

அ. 9 000

ஆ. 8 000

இ. 16 000


ஈ. 12 000


உ. 40 000

23. சமநிலைத் தேசிய வருமான மட்டம் வருமானப் பெருக்கி என்பவை அதிகரித்துச் செல்வதற்கான காரணம்

அ. சேமிப்புத் தொழிப்பாட்டு சாய்வு குறைவடைந்து சரிந்து செல்லுதல்
ஆ. சேமிப்புத் தொழிப்பாட்டு சாய்வு அதிகரித்து சரிந்து செல்லுதல்
இ. சேமிப்புத் தொழிற்பாட்டு சாய்வு அதிகரித்துச் செல்வதுடன் நுகர்வுத் தொழிற்பாட்டு சாய்வு குறைவடைந்து செல்லுதல்
ஈ. முதலீடு நிலையாக இருக்கும் போது சேமிப்புத் தொழிற்பாட்டு சாய்வு அதிகரித்துச் செல்லுதல்
உ. சேமிப்புத் தொழிற்பாட்டு சாய்வு நிலையான மட்டத்தில் இருப்பதுடன் நுகர்வுத் தொழிற்பாடு குறைவடைந்து செல்லுதல்

24.





வரைபில் சேமிப்பின் எதிர்க்கணியத்தைக் காட்டும் பகுதி எது?
அ. E பகுதி
ஆ, A,B பகுதி
இ. D பகுதி
ஈ. C பகுதி
உ. B பகுதி

25. மக்கள் வங்கியின் வைப்புக்கள் 10,000 ஒதுக்கு வீதம் 10% மக்கள் வங்கி மிகை ஒதுக்கை கடன் கொடுத்த பின் உள்ள ஐந்தொகை பற்றிய விடை எது?

அ

வைப்புக்கள்	10 000	ஒதுக்கு	10 000
	10 000		10 000

ஆ.

வைப்புக்கள்	19 000	ஒதுக்கு	10 000
		கடன்	9 000
	19 000		19 000

இ.

வைப்புக்கள்	10 000	ஒதுக்கு	1 000
		கடன்	9 000
	10 000		10 000

ஈ.

வைப்புக்கள்	9 000	ஒதுக்கு	9 000
	9 000		9 000

உ. வைப்புக்கள்	100 000	ஒதுக்கு	10 000
		கடன்	90 000
	100 000		100 000

26. பண நிரம்பல் அதிகரிப்பில் செல்வாக்குச் செலுத்தும் காரணி
அ. வெளிநாட்டு நாணய மாற்று வீதம் தேய்வடைதல்
ஆ. மத்திய வங்கியின் பாதுகாப்புக்கான கொள்முதல்
இ. நேரில் வரி அதிகரிப்பு
ஈ. வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்து ஒதுக்கு குறைவடைதல்
உ. மத்திய வங்கியின் ஒதுக்கீட்டு விற்பனை

27. மத்திய வங்கியின் மீள் கொள்வனவு தொடர்பாக பொருந்தாத கூற்று
அ. பணச் சந்தையில் மிகையான திரவத்தன்மை சேர்க்கப்படல்
ஆ. பண அழைப்புச் சந்தையில் வட்டி வீதம் குறைவாக வரையறுக்கப்பட்டிருத்தல்
இ. வணிக வங்கியின் கடன் விரிவாக்கம்
ஈ. பண நிரம்பல் சுருக்கமடைதல்
உ. குறைந்தளவு வட்டி வீதத்திற்கான வழி

28. பணக்கேள்வியின் அமையச் செலவு யாது
அ. வங்கி வைப்பிற்கான இழப்பு
ஆ, பண்டங்கள் சேவைகள் நுகர்வதால் ஏற்படும் இழப்பு
இ. வட்டி உழைப்பிற்கான இழப்பு
ஈ. முதலீட்டு இழப்பு
உ. மாற்றல்களுக்கான இழப்பு

29. பணச்சுற்றோட்ட வேகம் பற்றிய பொருத்தமான விடை யாது?
அ. நுகர்வோரால் மேற்கொள்ளப்படும் மாற்றல்களின் எண்ணிக்கை
ஆ, உயர்வலுப் பண நிரம்பலுக்கும் பண நிரம்பலுக்கும் இடையிலான தொடர்பு
இ. பொது மக்களால் வைத்திருக்கப்படும் மொத்த நாணயம்
ஈ. குறித்த பணத்தொகையை பயன்படுத்த வழி செய்யும் பணத்தின் அளவு
உ. குறித்த நேரத்தில் ஒரு அலகு நாணயத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் செலவுகளின் எண்ணிக்கை

30. பண நிரம்பலை தீர்மானிக்கும் காரணிகள் பின்வருமாறு . மொத்த நிதியில் செல்வாக்கு செலுத்தாத காரணி எது?
அ. மத்திய வங்கியின் சட்டப்படியான வீதம்
ஆ, வங்கி முறைமையில் காணப்படும் தேறிய நிதிப் பொறுப்புக்கள் அல்லாதவை
இ. வணிக வங்கியால் தனியார் துறைக்கு வழங்கப்படும் கடன்கள்
ஈ. வங்கித் தொகுதிக்கு அரசினால் வழங்கப்படும் கடன்கள்
உ. வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள்.

31. ஒரு நாட்டின் அரச நிதி நடத்தை பற்றி விபரிக்கும் கூற்று எது
அ. பண்டக் கணக்கு மீதி
ஆ, மூலதன நிதிக் கணக்கு மீதி
இ. முதன்மைக் கணக்கு மீதி
ஈ. வருமானக் கணக்கு மீதி

உ. பண்டங்கள் சேவைகள் கணக்கு மீதி

32. பொருளாதார பாகுபாட்டிற்கு ஏற்ப அரசின் மீண்டெழும் செலவினுள் உள்ளடங்கும் விடயங்களை இனங்காண்க?

அ. அரச நுகர்வுச் செலவு, நடைமுறை மாற்றல், தேறிய கடன் வழங்கல்

ஆ. அரச நுகர்வுச் செலவு, நடைமுறை மாற்றல்,

இ. பண்டங்கள் சேவைகளின் நடைமுறைச்செலவு, நடைமுறை மாற்றல்கள், அரசகடன் வட்டிக் கொடுப்பனவு

ஈ. பண்டங்கள் சேவைகள் செலவு, அரச வட்டி வீதக் கொடுப்பனவு, அரச நடைமுறைச்செலவு

உ. நடைமுறை மாற்றல், பண்டங்கள் சேவைகளுக்கான நடைமுறைச்செலவு

33.பொருளாதாரம் ஒன்றின் வரித்தகவல்கள் பின்வருமாறு

வருமானம்	அரச வரி வருமானம்		
	I	II	III
50,000	12,500	15,000	10,000
100,000	25,000	25,000	25,000
200,000	50,000	40,000	60,000

வருமானத்திற்கும் வரிவகைக்கும் (I,II,III) இடையிலான ஒப்பீடுகளை தெளிவாகக் காட்டும் விடை

அ. விருத்தி முறைவரி, தேய்வு முறைவரி, விகித வரி

ஆ. விகித வரி, விருத்தி முறை வரி, தேய்வுவரி

இ. விகித வரி, தேய்வு வரி , விருத்தி முறை வரி

ஈ. விருத்தி முறைவரி, விகித வரி, தேய்வுமுறை வரி

உ. தேய்வுமுறைவரி, விருத்திமுறை வரி, விகித வரி.

34. சென்மதி நிலுவை மிகை ஒன்றில் விளைவை ஏற்படுத்தாதது எது?

அ. வெளிநாட்டு ஒதுக்கு வீதம் அதிகரித்தல்

ஆ. ஏற்றுமதிகளுக்கான போட்டித்தன்மை அதிகரித்தல்

இ. வெளிநாட்டு நாணய மாற்று வீதம் உயர்வடைதல்

ஈ. இறக்குமதிகளின் போட்டி குறைந்த மட்டத்தில் இருத்தல்

உ. விரும்பத்தகாத இறக்குமதிகள்.

35. ஒரு அலகு ஊழியத்தைப் பயன்படுத்தி இலங்கை, இந்தியா ஆகிய இரு நாடுகள் உணவு, துணி ஆகிய பண்டங்களை உற்பத்தி செய்யும் அளவுகள் பின்வருமாறு

	இலங்கை	இந்தியா
உணவு	10	20
துணி	5	5

சர்வதேச வர்த்தகத்தில் இரு நாடுகளும் அனுகூலமான முறையில் ஈடுபடுவதனால் கிடைக்கும் நாணய பரிமாற்று விகிதம் யாது

அ. 1அலகு உணவு : .25 < 0.5 துணி

ஆ. 1அலகு துணி : 2 < 4 உணவு

இ. 1அலகு துணி : 0.25<0.5 உணவு

ஈ. 1அலகு துணி : 2<4 உணவு

உ. 1அலகு உணவு : 2<4 துணி

36. ஒரு நாட்டின் நாணயப் பெறுமதி தேய்வில் விளைவை ஏற்படுத்துவது

அ. வெளிநாட்டுச் சொத்து ஒதுக்கு குறைவடைதல்
ஆ. வட்டி வீதம் குறைவடைதல்
இ. விரும்பத்தகாத வர்த்தக வீதம்
ஈ. வெளிநாட்டு கடன் செலுத்துகை குறைவடைதல்
உ. வெளிநாட்டு நாணயத்தின் பெறுமதி குறைவடைதல்

37. பொருளாதாரம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு

பண்டக்கணக்கு மீதி	(20)
சேவைகள் கணக்கு மீதி	(5)
தேறிய வருமானம்	10
தேறிய நடைமுறை மாற்றல்	15
மூலதன நிதிக்கணக்கு	15

மேற்குறிப்பிடப்பட்ட தகவல்களைக் கொண்டு சரியான விடையை தெரிவு செய்க
அ. திரண்ட மீதி நேர்க்கணியப் பெறுமதியில் காணப்படுவதால் சாதகமான பொருளாதார நிலைமை காணப்படும்.
ஆ. உள்நாட்டின் பணநிரம்பல் சுருக்கமடைதல்
இ. வெளிநாட்டு சொத்து ஒதுக்கத்தினால் பாதிப்பு இல்லை
ஈ. பூச்சிய உழைப்பு மட்டத்தினால் சாதகமான பொருளாதார நிலைமை காணப்படல்
உ. வெளிநாட்டுப் பொறுப்பு குறைவடைதல்

38. இலங்கையின் வெளிநாட்டுச் சொத்துக்கள் 5 000, ஏற்றுமதி உழைப்புக்கள் 10,000, இறக்குமதிக் கொடுப்பனவு 15,000, இறக்குமதிக்கான வெளிநாட்டுச் சொத்துக்களின் நிறைவான மட்டம் பற்றி யாது கூறுவீர்
அ. பண்டங்களின் இறக்குமதிக்கு வெளிநாட்டுச் சொத்துக்கள் போதுமானதல்ல
ஆ. சென்மதி நிலுவைப் பற்றாக்குறை நிதியிடலுக்கு வெளிநாட்டுச் சொத்துக்கள் போதாமை
இ. வெளிநாட்டுச் சொத்துக்களின் அடிப்படையில் இறக்குமதி நடைபெறுமாயின் இது நான்கு மாதங்களுக்கு மாத்திரமே போதுமானதாகும்
ஈ. வெளிநாட்டுச் சொத்துக்களின் அடிப்படையில் இறக்குமதி நடைபெறுமாயின் இது ஐந்து மாதங்களுக்கு மாத்திரமே போதுமானதாகும்
உ. வெளிநாட்டுச் சொத்துக்களின் அடிப்படையில் இறக்குமதி நடைபெறுமாயின் இது இரண்டு மாதங்களுக்கு மாத்திரமே போதுமானதாகும்.

39. "அபிவிருத்தி அடைந்த நாடுகளிலும் அபிவிருத்தி அடையாத நாடுகளிலும் ஒருங்கிணைக்கப்படாத நிலை காணப்படுகிறது". ஒருங்கிணைப்கப்படாத நிலை என்பதன் கருத்து யாது?
அ. அரச நிறுவனங்கள் தனியார் மயப்படுத்தல்
ஆ. தனியார் நிறுவன உடமைகளை பொதுமக்களுக்கு மாற்றுதல்
இ. தனியார் நிறுவனங்கள் அரசுடமையாக்கப்படல்
ஈ. தனியார் வர்த்தகத்தில் அரச கட்டுப்பாடு இறுக்கமற்றதாக காணப்படல்
உ. அரச துறையின் சில தொழிற்பாடுகள் தனியார் துறையினரால் நடத்தப்படல்

40. இலங்கையின் வறுமையில் அதிக தாக்கத்தை ஏற்படுத்தும் காரணி வேலையின்மையாகும். வேலையின்மை என்பதன் மூலம் நீர் கருதுவது யாது
அ. அரை நேர வேலை
ஆ. கிடையான தொழில் நகர்வு நடைபெறல்
இ. நிலைக்குத்தான தொழில் நகர்வு
ஈ. வேலை செய்பவர் ஆனால் வருமானம் போதுமானதாக இல்லை
உ. வேலை செய்பவராக இருப்பினும் வருமானமும் நேரமும் போதுமானதாக இல்லை.

41. நிலைத்து நிற்கும் அபிவிருத்தி என்னும் எண்ணக்கருவை விபரிக்கும் மிகப் பொருத்தமான விடை எது?

அ. நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் அதி உயர்ந்த பொருளாதார வளர்ச்சியை அடைதல்

ஆ. சூழல் பாதுகாப்பைக் குறிக்கோளாகக் கொண்டு கொள்கைகளை அமுல்படுத்துதல்

இ. நிகழ்கால சந்ததியினர் தமது தேவைகளை நிறைவேற்றுவதுடன் எதிர்கால சந்ததியினரைக் கருத்திற் கொண்டு தேவைகளை பூர்த்தி செய்வதில் வளங்களை இடுவர்

ஈ. அருமை தொடர்பான பொருளாதார பிரச்சனையை எதிர்காலத்தில் நீக்கிக் கொள்ளல்

உ. முழுவறுமையை நிகழ்கால, எதிர்கால சந்ததியினருக்கு குறைத்துக் கொள்ளல்.

42. ஒரு நாட்டின் சமமான வருமானம் பெறும் வர்க்கத்தினரிடையே கினி குணகத்தின் பெறுமதி பின்வருமாறு காணப்படும்.

அ. 0.0

ஆ. 1.0

இ. 0.5

ஈ. 1.0ற்கு மேல்

உ. முடிவிலி

43. உயர்வான பொருளாதார வளர்ச்சி வீதம் காணப்படும் நாடு

அ. கட்டார்

ஆ. சீனா

இ. அமெரிக்கா

ஈ. கானா

உ. ஆர்ஜன்ரீனா

44. பொருளாதார அபிவிருத்தியினை தீர்மானிக்காதது எது?

அ. சூழல் தாக்கம்

ஆ. பொருளாதார வளர்ச்சி விகிதம்

இ. முதலீட்டு விகிதம்

ஈ. சேமிப்பு விகிதம்

உ. அரசு கருத்திற்கொள்ளும் வர்த்தகத் துறையினரின் விளைவின் அளவு

45. லோறன்ஸ் வளையி உறுதியான வருமானப் பங்கீட்டைக் காட்டுவது எப்போது

அ. வறுமை அதிகரித்தல்

ஆ. சார்பு வருமானப் பங்கீடு அதிகரித்தல்

இ. கினிகுணகம் 1ற்கு சமனாக இருத்தல்

ஈ. உயர்வான வருமானம் பெறுவோருக்கு சாதகமாக இருத்தல்

உ. சாபு வருமானப்பங்கீடு குறைந்த சமமின்மையாக இருத்தல்

46. இலங்கை ரூபாவின் பெறுமதி குறைவடைதல் என்பது

அ. இலங்கையில் வெளிநாட்டுப் பயணிகள் வருகைக்கான ஊக்குவிப்பு குறைவடைதல்

ஆ. வெளிநாட்டு நுகர்வோர் இலங்கைப் பண்டங்கள் கொள்வனவு செய்யும் அளவு ஊக்குவிப்பு குறைவடைதல்

இ. வெளிநாட்டு பண்டங்களுக்கான நாணயங்களின் எண்ணிக்கைப் பெறுமதி குறைவடைதல்

ஈ. வெளிநாட்டுப் பண்டங்களை அதிகளவு கொள்வனவு செய்யும் படி இலங்கையில் ஊக்குவித்தல்

உ. இலங்கைப்பண்டங்களை அதிகம் கொள்வனவு செய்யும் படி வெளிநாட்டவரை ஊக்குவித்தல்

47. அண்மையில் இலங்கை அதிகளவில் இறக்குமதிச் சந்தையில் ஈடுபடும் நாடு
அ. அமெரிக்கா
ஆ. இந்தியா
இ. சீனா
ஈ. ஜப்பான
உ. ஜரோப்பியா

48. தரப்பட்ட ஆண்டில் ஒரு நாட்டின் வர்த்தக விகிதம் 20% ஆல் அதிகரித்தால் இறக்குமதி விலைகள் 120% ஆல் அதிகரிக்கும். தரப்பட்ட ஆண்டின் ஏற்றுமதி விலைச்சுட்டெண் யாது.
ஆ. 264
ஆ. 144
இ. 124
ஈ. 240
உ. 200

49. பாதகமான வர்த்தக நிலுவை பற்றி நீர் கருதுவது யாது
அ. ஏற்றுமதி அளவு குறைவடைதல்
ஆ. ஏற்றுமதி விலை அதிகரித்தல்
இ. ஏற்றுமதி உழைப்புப் பெறுமதி குறைவடைதல்
ஈ. இறக்குமதி விலை சார்பாக ஏற்றுமதி விலை குறைவடைதல்
உ. இறக்குமதி அளவு சார்பாக ஏற்றுமதி அளவு குறைவடைதல்

50. இலங்கை இந்தியா ஆகிய நாடுகள் A,B எனும் பண்டங்களை உற்பத்தி செய்யும் அளவுகள் பின்வருமாறு. ஒவ்வொரு நாட்டுக்குமான ஊழியச் செலவு ஒரு அலகு ஆகும்

	A	B
இலங்கை	10	2
இந்தியா	4	8

தரப்பட்ட தகவல்களிலிருந்து மிகச்சரியான விடையைத் தெரிவு செய்க

அ. முழு நன்மையின் அடிப்படையில் இலங்கை A பண்ட உற்பத்தியையும் இந்தியா B பண்டத்தையும் உற்பத்தி செய்யும்
ஆ. முழு நன்மையினடிப்படையில் இலங்கை B பண்டத்தையும் இந்தியா A பண்டத்தையும் உற்பத்தி செய்யும்
இ. இலங்கை A பண்டத்தை ஏற்றுமதி செய்து B பண்டத்தை இறக்குமதி செய்யும்
ஈ. ஒப்பீட்டு நன்மையடிப்படையில் இரு நாடுகளிலும் இந்தியா A பண்டத்தையும் இலங்கை B பண்டத்தையும் மேற்கொள்ளும்
உ. ஒப்பீட்டு நன்மையடிப்படையில் இரு நாடுகளும் A பண்ட உற்பத்தியில் ஈடுபடும்

சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய
சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய
சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய
சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய

சிப்சர உதானய செயலமர்வு

கல்விப் பொதுத் தராதர உயர் தரப் பரீட்சை 2013

பொருளியல் - 11 | **மூன்று மணித்தியாலங்கள்**

(1)

I) (a) பொருளாதார முறைகள் என்றால் என்ன? விபரிக்குக
(b) பல்வேறு பொருளாதார முறைகள் காணப்படுவதற்கான காரணங்கள் எவை?

II) திட்டமிட்ட பொருளாதாரம் ஒரு சமூகப்பொருளாதாரம் அல்ல. இக்கூற்றினை விபரிக்குக?

III) வள ஒதுக்கீட்டுச் செயற்றிறன், உற்பத்திச் செயற்றிறன் என்பவற்றை விளக்குக?

IV) பொருளாதார சுதந்திரம் என்பதனை விபரிக்குக?
பொருளாதார முறைமைகளை வேறுபடுத்தப் பயன்படுத்தப்படும் தகுதிகள் எவை?

V) உற்பத்தி ரீதியான எதிர்க்கணிய வெளிவாரி விளைவுகள் நுகர்வு ரீதியான நேர்க்கணிய வெளிவாரி விளைவுகள் காரணமாக சந்தைத் தோல்வி ஏற்படுவதை வரைபடம் முலம் விளக்குக

(2)

I) உற்பத்திச் சாத்திய பிரதேசம் சாத்தியமற்ற பிரதேசம் என்பவற்றை வரைபடமூலம் விளக்குக

II) $y=100-5x$ என்பதற்கான உற்பத்தி சாத்திய வளையியை வரைக.
பொருளாதாரமானது 50y அலகையும் 10x அலகையும் உற்பத்தி செய்கிறது. ஒவ்வொரு y அலகுற்றுமதிக்கும் 0.5 அலகு x பண்டத்தை இறக்குமதி செய்ய முடியும். சர்வதேச வர்த்தகத்தை கருத்திற்கொண்டு 50y அலகை நுகரும்போது எவ்வளவு x அலகை நுகரலாம் என்பதனை வரைபின் மூலம் வரைந்து விளக்குக.

III) பொருளாதாரம் ஒன்றில் மூலதனம் என்பது ஒரு மெய்ச்சொத்தாகக் கருதப்படுகிறது. அது நிதிச்சொத்தல்ல. இக்கூற்றினை உதாரணம் மூலம் விளக்குக

IV) இலங்கையில் மூலதனம் உருவாகும் முறைபற்றிக் குறிப்பிடுக?

V) ஊழியப்படையை நோக்காகக் கொண்டு முதலீடுகள் மூலமாக மனித மூலதனம் தோற்றம் பெறுகிறது. இக்கூற்றினை விபரிக்குக

(03) சந்தை ஒன்றின் கேள்வி, மிகை கேள்விச் சமன்பாடுகள் பின்வருமாறு

(a) கேள்விச் சமன்பாடு $Qd=100-2p$
(b) மிகைக் கேள்விச் சமன்பாடு $Ed=100-4p$

I)

(a) சந்தையின் நிரம்பல் சமன்பாட்டைக் காண்க?
(b) கேள்வி, நிரம்பல் வளையியைப் பயன்படுத்தி சமநிலை விலை தொகையைக் கணிப்பிடுக

II) 10/= வினை அரசு வரியாக விதிப்பின் உற்பத்தியாளர் மிகை, நுகர்வோன் மிகை யாது?

III) அலகு ஒன்றிற்கு 30/= ரூபாவைஅரசு குறைந்த பட்ச கட்டுப்பாட்டு விலையாக விதிப்பின் அரசிற்கு ஏற்படும் மொத்தச் செலவு யாது?

IV) கேள்வியில் நேர்வரி நேரில்வரி என்பவற்றின் விளைவுகளை வரைபடரீதியாக விபரிக்குக

V) கருதுகோள் ரீதியான பொருளாதாரம் ஒன்றின் கேள்வி நிரம்பல் பற்றிய சமன்பாடுகள் பின்வருமாறு

$qd=100 - 5p$
$qs=20 + 5p$

இறக்குமதி விலையாக அரசு 8/= ரூபாவினை விதிக்கின்றது. இறக்குமதி வரியாக 2/= விதிக்கப்பட்டால் தேறிய சமூக நலன் விளைவு யாது?

(04)

I. நீண்டகால உற்பத்தி, குறுங்கால உற்பத்தி நடவடிக்கைகள் மூலம் நீர் கருதுவது யாது?

II. உற்பத்தியாளர் மிகை, பொருளியல் லாபம் என்பவற்றிற்கிடையிலான வேறுபாடு யாது?

III. நிறைபோட்டிச்சந்தை ஒன்றின் பண்டம் பற்றிய தகவல்கள் பின்வருமாறு

வெளியீடு	0	1	2	3	4	5	6
சராசரிச் செலவு	0	60	40	30	20	30	40

மொத்த நிலையான செலவு 100
பின்வருவனவற்றைக் கணிப்பிடுக
(1) மொத்தச்செலவு
(2) மொத்த மாறும் செலவு
(3) எல்லைச் செலவு

IV) சிலருரிமைச்சந்தையின் பண்புகள் எவை?

V) நிறைபோட்டிச் சந்தை ஒன்றில் குறுங்காலத்தில் உற்பத்தி செய்வதற்கு தேவையான இழிவு விலை பற்றி விளக்குக.

(05)

I.) கருதுகோள் ரீதியான பொருளாதாரம் ஒன்றின் தகவல்கள் பின்வருமாறு.

சந்தை விலையிலான மொத்த உள்நாட்டு உற்பத்தி	78
பண்ட இறக்குமதி	15
வீட்டுத்துறை நுகர்வு	50
மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கம்	
தனியார்	13
அரசு	05
இறக்குமதிச் சேவை	07
காரணிச் சேவைகள் இறக்குமதி	03
அரச நுகர்வு	14
இருப்பு மாற்றம்	02
பண்டங்கள் காரணி அல்லா சேவை ஏற்றுமதி	16

மேற்குறிப்பிட்ட தகவல்களைக் கருத்தில் கொண்டு பின்வருவனவற்றைக் கணிப்பிடுக
(a) மொத்த மூல வளங்கள்
(b) மூலவளங்களின் பயன்பாடு

II.) மொத்த உள்நாட்டு உற்பத்தி 2930
வெளிநாட்டிலிருந்து பெற்ற காரணி வருமானம் 32
வெளிநாட்டிற்கு கொடுத்த காரணி வருமானம் 72
வெளிநாட்டு தனியார் நடைமுறை மாற்றல் பெறுவனவு 224
வெளிநாட்டு தனியார் நடைமுறை மாற்றல் கொடுப்பனவு 26
வீட்டத்தறை நுகர்வு 1988
அரச நுகர்வு 451

அரச சேமிப்பைக் கணிப்பிடுக

III) மொத்த உள்நாட்டு உற்பத்தி 1200
விலைச்சுட்டெண் (100) 125
ஏற்றுமதி செய்யப்படும் பண்டங்களின் சந்தை பற்றிய தகவல்கள் பின்வருமாறு
தேயிலை = 25
இறப்பர் = 40
தென்னை = 20
ஏனையவை = 5
தேறிய வெளிநாட்டுக் காரணி வருமானம் 50
மெய்த் தேசிய வருமானத்தைக் கணிப்பிடுக

IV. குறித்த வருடம் ஒன்றிற்கான பொருளாதாரம் தொடர்பான தரவுகள் பின்வருமாறு

பெறுமானத் தேய்வு	50
சம்பளமும் கூலியும்	5950
மொத்த உள்நாட்டு உற்பத்தி	265615
இலாபப் பெறுவனவு	25700
இலாபக் கொடுப்பனவு	28573
வட்டிப் பெறுவனவு	5800
வட்டிக்கொடுப்பனவு	9250

பின்வருவனவற்றைக் கணிப்பிடுக?

(a) தேறிய வெளிநாட்டுக் காரணி வருமானம்
(b) மொத்த தேசிய உற்பத்தி

V) (a) தேசிய வருமானக் கணிப்பீட்டில் உள்ளடக்கப்படாத விடயங்கள் எவை?
(b) மொத்த தேசிய உற்பத்தி
தேசிய வாருமானக் கணிப்பீட்டில் உள்ளடக்கப்படாத விடயங்களி எவை?

6)

I) சாத்தியமான மொத்த உள்நாட்டு உற்பத்தி என்பதனை விபரிக்குக.
II) குறித்த நாடு ஒன்றின் தகவல்கள் பின்வருமாறு

சேமிப்ப	S	=	-100+.2yd
வரி	T	=	50+0.2Y
முதலீடு	I	=	100
அரசசெலவு	G	=	250
ஏற்று மதி	X	=	150
இறக்கு மதி	M	=	0.2Y

மொத்தவெளிப்பாச்சல் 500 ஆக இருப்பின் வெளியீட்டுமட்ட அளவு யாது?

III) தனியார் நுகர்வுச் செலவு தன்னிச்சையான நுகர்வுச் செலவு என்பவற்றுக்கிடையிலான வேறுபாடு யாது?

IV) MPC= 0.8 அரசு கொள்வனவை 200 ஆல் அதிகரிப்பதுடன் வரிவருமானத்தையும் 200 ஆல் அதிகரிக்கும் போது சமநிலைத் தேசியவருமானத்தில் ஏற்படும் தாக்கம் பூச்சியமாகும்.இக்கூற்றினை நீர் ஏற்கின்றீரா? இல்லையா? விளக்குக.

V) எளிய பொருளாதார மாதிரி ஒன்றில் மொத்தச் செமிப்புத் தொழிற்பாட்டின் சாய்வு குறைவடைகிறது அதன் விளைவை வரைபடத்துடன் வரைக.

(7) பொருளாதாரம் ஒன்றில் சமூலபற்றாக்குறைக்கும் முதன்மை கணக்கு பற்றாக் குறைக்கும் இடையிலான வேறுபாட்டை விபரிக்குக.

ii) 2012ம் ஆண்டுக்கான அரசநிதி தொடர்பான தகவல் பின்வருமாறு

மூலதன மாற்றல்	500
அரச மறைமுகவரிவருமானம்	8000
சம்பளமும் கூலியும்	9000
நடைமுறை மாற்றல்	2000
அரச கடன் வட்டி	3500
வரியில்லாவருமானம்	4000
வெளிநாட்ட நன்கொடை	500
உள்நாட்டவங்கியல்லாமூலங்களில் இருந்து பெற்ற வருமானம்	2250
நேர் வரிவருமானம்	2000
மெய்ச் சொத்துக்கள்	3000
வெளிநாட்டுக்கடன்	2000
தேறிய கடன்	1000

பின்வருவனவற்றைக் கணிப்பீடுக

(1) மொத்த நிலுவை

(2) நிதிஅல்லாத வரவு செலவுத்திட்ட பற்றாக்குறை

(3) முதன்மைக்கணக்கு நிலுவை.

iii) (a) பாதீட்டுப்பற்றாக்குறையின் விளைவுகள் எவை?

(b) "பாதீட்டுப்பற்றகக்கறை எப்போதும் பாதகவிளைவுகளை ஏற்படுத்துவது இல்லை"இக்கூற்றுக்கு நீர் உடன்படுகின்றீரா? இல்லையா விபரிக்குக.

(c) இலங்கையில் அண்மைக்காலவரி வருமானக்கட்டமைப்பை விபரிக்குக.

(d) கடந்த ஒரு வருட காலப்பகுதியில் இலங்கையின் வரிவருமானத்தை அதிகரிக்க மேற்கொண்ட நடவடிக்கைகள் எவை?

8)

(I) பணக்கேள்விக்கும் வட்டிவீதத்திற்கும் இடையில் எதிரிடையான தொடர்பு காணப்படுவதற்கான காரணங்களை விபர்க்குக.

(ii) நடைமுறை ஆண்டடின் அரச பொருளாதாரம் தொடர்பாக மதிப்பிடப்பட்ட தகவல்கள் பின்வருமாறு.

பொதுமக்களிடம் உள்ள பணம்	250
வணிகவங்கிகளிடம் உள்ள பணம்	50
மத்தியவங்கியிடம் வணிகவங்கிகள் ஒதுக்கி வைப்பிலிடப்பட்டுள்ள பணம்	150
பொதுமக்களின் பெயரில் வணிகவங்கிகளிடமுள்ள சேமிப்புதவணைவைப்பு	200
வணிக வங்கிகளிடமுள்ள சேமிப்பு தவணைவைப்பு	1750
வதியாதோர் வெளிநாட்க் கணக்கு	160
வெளிநாட்டு நாணய வங்கி அலகிலுள்ள உள்நாட்டுவரின் வைப்புக்கள்	200

பின்வருவனவற்றைக்கணிப்பிடுக.

(a) ஒன்று திரட்டப்பட்ட விரிந்த பணநிறம்பல்

(b) ஒன்றினைக்கப்பட்ட பணப்பெருக்கி

(iii) நாணயத்தளம் என்றால் என்ன?அதனைத்தீர்மானிக்கும் காரணிகளை விளக்குக

(vi) தொகைக்கடன் கட்டுப்பாடு , தெரிவுக்கடன் கட்டுப்பாட்டு முறை என்பவற்றை என்பவற்றை விளக்கி அவற்றின் கருவிகளைக் குறிப்பிடுக.

(v) வணிகவங்கி ஒன்றின் எளிய ஐந்தொகைபின்வருமாறு.

(vi) வணிக வங்கிஒன்றின் எளிய ஐந்தொகை மாதிரி பின்வருமாறு.

வைப்புக்கள்	500	காசு ஒதுக்கு	70
		திறைசேரிஉண்டியல்	30
		கடன்கள்	300

10% ஒதுக்கு வீதம் காணப்படுமாயின் இவ்வங்கியின் புதிய கடன்களை அடைப்பதற்குறிய மொத்தத் தொகையையும் காசோலையாக வழங்கிய பின் வங்கியின் ஐந்தொகை எவ்வாறு காணப்படும்

(9) (I) சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபடுவதால் நாட்டுக்குகிடைக்கும் நன்மைகள் எவை?

(ii) ஒரு அலகு ஊழியத்தைப்பயன்படுத்தி அமெரிக்கா, ஜெர்மன் ஆகிய இருநாடுகள் கோதுமை, துணி என்பவற்றினை உற்பத்தி செய்யக்கூடிய அளவுகள் பின்வருமாறு

	அமெரிக்கா	ஜெர்மனி
கோதுமை	2	6
துணி	10	4

பின்வரும் வினாக்களுக்கு விடைதருக.

(a) எந்த நாடு எப்பொருள் உற்பத்தியில் முழுநன்மையைக் கொண்டுள்ளது?

(b) ஒப்பீட்டு நன்மை அடிப்படையில் எந்த நாடு எப்பொருளை உற்பதி செய்வது சிறந்தது

(c) இரு நாடுகளிடமும் 300 அலகுகள் ஊழியம் இருப்பதாக கருதினால் சிறப்புத் தேர்சியின் காரணமாக கிடைக்கும் நன்மை யாது?

(d) நன்மைகளின் அடிப்படையில் அமெரிக்கா ஜெர்மனிகளுக்கிடையிலான பரிமாற்ற விகிதங்கள் யாது?

iii) "ஒரு நாட்டின் இரு பண்டங்கள் தொடர்பான சர்வதேச வர்த்தக மாற்றுவிதம் தரப்பட்டுள்ள நிலையில் அந்நாட்டிற்கு அது நன்மையளிப்பதாக காணப்படுகிறது" இக்கூற்றினை விபரிக்குக.

iv) உலகசந்தையில் x பண்டத்தை ரூ100/= விற்கு விற்பனை செய்கின்றார். உள்நாட்டு உற்பத்தியாளர் அதனை ஆக்குவதற்கான இறக்குமதி உள்ளீட்டுக்கு ரூ60/= தேவையானது எனக் கொள்க. இறக்குமதி செய்த பாதணிகளின் மீது 30% இறக்குமதிதீர்வை விதிக்கப்பட்டால் பயனுறதி வாய்ந்த பாதுகாப்பு வீதத்தின் பெறுமதியாது?

v) பயனுறுதிவாய்ந்த பாதுகாப்பு வீதம் பூச்சியமாகவும் இறுதிப் பண்டங்களின் மீது 30%தீர்வையும் விதிக்கப்படின் இறக்கமதி உள்ளீட்டக்கான வரிவீதம்.

(10) (I) பொருளாதார வளர்ச்சி , பொருளாதார அபிவிருத்தி என்பவற்றுக்கிடையிலான வேறுபாடு யாது? விபரிக்குக.

ii) பொருளாதார வளர்ச்சியுடன் மக்களின் வாழ்க்கைத் தரத்தை அதிகரிக்க மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகலள்ண எவை?

iii) வறுமை என்பதன் மூலம் நீர் கருதுவது யாது?

iv) (HDI) மானிட அபிவிருத்திச் சுட்டெண் கணீப்பீட்டு முறை பற்றி விபரிக்குக.

v) நிலைத்து நிற்கும் அபிவிருத்தி என்பதன் மூலம் நீர்கருதுவது யாது?

(4 x 5=20புள்ளி)

சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய
சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய
சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய
சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய

சிப்சர உதானய செயலமர்வு

கல்விப் பொதுத் தராதர உயர் தரப் பரீட்சை 2013

தமிழ் - 1	மூன்று மணித்தியாலங்கள்

* பகுதி I இல் உள்ள இரு வினாக்களுக்கும், பகுதி II இல் உள்ளவற்றுள் எவையேனும் மூன்று வினாக்களுக்கும் எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

பகுதி - I

01. மேல்வரும் செய்யுட்களை வாசித்து அவற்றின் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

1) பாணன் சூடிய பசும்பொற்றாமரை
மாணிழை விறலி மாலையொடு விளங்கக்
கடும்பரி நெடுங்தேர் பூட்டு விட் டசைஇ
ஊரீர் போலச் சுரத்திடை யிருந்தளிர்
யாரீ ரோவென வினவ லானாக்
காரெ னொக்கற் கடும்பசி யிரவல
வென் வே லண்ணற் காணா ஆங்கே
நின்னிறும் புல்லியே மன்னே யினியே
இன்னே மாயினே மன்னே யென்றும்
உடாஅ போரா வாகுத லறிந்தும்
படாஅ மஞ்ஞைக் கீத்த வெங்கோ
கடாஅ யானைக் கலிமான் பேகன்
எத்துணை யாயினு மீத்த னன்றென
மறுமை நோக்கின்றோ வன்றே
பிறர் வறுமை நோக்கின் றவன்கை வண்மையே.

அ) 1) மேலுள்ள பாடலில் முதல் ஐந்து வரிகளுக்கும் பொருள் கூறுக.
2) அளபெடையை கூறி உதாரணம் எடுத்துக்காட்டுக.
3) பேகன் மன்னனின் கொடைச் சிறப்பினை குறிப்பிடுக. (3x4=12 புள்ளிகள்)

2) சேமம் என்பன பற்றி அன்பு திருந்த இன்துயில் செய்த பின்
வாம மேகலை மங்கையோடு வனத்துள் யாருமை மறக்கிலா
நாம நம்பி நடக்கும் என்று நடுங்குகின்ற மனத்தவாய்
நாமும் இம் மண்இறத்தும் என்பன போல் எழுந்தன யானையே.

சிரித்த பங்கயம் ஒத்தசெங்கண் இராமனைத் திருமார்பையக்
கரிக்கரம் பொருகைத்தலத்து உயர்காப்புநாண் அணிதற்கு முன்
வரித்த தண்கதிர் முத்தது ஆகி இம்மண் அனைத்தும் நிழற்ற மேல்
விரித்த பந்தர் பிரித்ததாம் என மீன் ஒளித்தது வானமே!

ஆ) 1) இப்பாடலுக்கு பொருளை எழுதுக.
2) இப்பாடலில் கையாளப்பட்ட அணியை எடுத்துக்காட்டி விளக்குக.
3) "நாம நம்பி நடக்கும்என்று நடுங்குகின்ற மனத்தவாய்" என்ற அடியினூடாக யானையின் நிலை எடுத்துக்காட்டப்படுமாற்றினை ஆராய்ந்து கூறுக.
(3x4=12 புள்ளிகள்)

02. "அ" பகுதியில் உள்ள கவிதையைப் படித்து, அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

பூக்காரி

மழைக்காலின் மையிருட்டில்
மேகம் குனிய இடி முழங்க
வீடு வந்த மழையின் கண்ணீர்
பூக்காரி பொங்கும் குரல்
மையிருட்டில் மேனி ஒங்கி
மழைநீரின் குரலினோடு
பரவிற்று திசை எங்கும்
மல்லிகை வேணுமா?
ஜாதி மல்லிகை
மழை இருட்டில்-
தெருவி லொரு
ஈ குருவி பறக்கவில்லை
மேகம் வலுத்தது
மழை மீன்கள் துள்ளின
மின்னல்கள் சிரித்து
மேகத்தைக் கொளுத்தின
கூத லென்றும் நாகம்
குடையோடு சீறிற்று
அஞ்சி ஒடுங்கிய அழகிய பெண்கள்
அடுப்பங்கரை சேர்ந்து
களைப்பை மருவினர்
மல்லிகை ரத்தினம்
மருக்கொழுந்து பச்சை
ஏறி மறைக்கும் கூந்தலோர் வாரீர்
மல்லிகை வேணுமா?
ஜாதி மல்லிகை
என்றழுதாள் பூக்காரி
பூக்காரி பொங்கும் குரல்
பெண்களை எழுப்பவில்லை
சாரலின் கடுஞ் சினத்தில்
பூ மோகம் ஆடவில்லை
பூக்காரி குரலினோடு
கூடிற்று மழையின் கண்ணீர்
பூக்காரி பொட்டுக் கூடை
திரும்பிற்று வீடு நோக்கி

1) இப்பாடலினால் ஆசிரியர் உணர்த்த விழைவது யாது?
2) இயற்கையின் சீற்றம் எவ்வாறு உள்ளது என ஆசிரியர் கூறுகின்றார்?
3) இப்பாடலின் மொழிநடை எவ்வாறு அமைந்திருக்கின்றது என்பதை குறிப்பிடுக?
4) பூக்காரியிடம் காணப்பட்ட பூக்கள் அவர் மேற்கொண்ட கருத்தை வெளிப்படுத்துக.

(4x4=16 புள்ளிகள்)

அல்லது

ஆ) பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

உலகத்தை திருத்துவதை விட உடம்பைத் திருத்துவது எளியது. எவ்வாறு என்றால் உடம்பு ஓரளவு நம்முடைய கையில் உள்ளது. தகுந்த உணவு, நல்ல பயிற்சி, புலனடக்கம். தக்க மருத்துவம் முதலியவற்றால் ஓரளவு உடம்பு திருத்துவதைக் காண்கிறோம். ஆயினும் உடம்பு முழுவதும் நம் வசப்பட்டது. என்று கருதக்கூடாது. அது இயற்கையின் தட்பவெட்பத்தால் கட்டுப்படுவது; வெளியே உள்ள தூசி, புகை முதலியவற்றால் மாறுவது; தீயகாற்று. கெட்டநீர் முதலியவற்றால் கெடுவது நோய்க்கிருமிகளால் தாக்கப்படுவது அல்லாமலும் உடம்பு கருவில் வளரும் போதே பெற்றோர்களின் உடம்பில் இருந்த சில தீமைகளையும் பெற்று வளருகிறது. ஆகவே பாதியளவிற்கு நம் முயற்சியைக் கடந்ததாக வும், பாதியளவிற்கு நம்முயற்சிக்கு உட்பட்டதாகவும் உள்ளது. ஆகையால் உடம்பைக் காக்கும் கடமையை ஒரு வகை நம்பிக்கையோடு மேற்கொள்ள வேண்டும். ஆனால் இவ்வகையில் முயற்சி எடுத்துக் கொள்வோர் ஒரு சிலரே. உலகத்தைத் திருத்த வரிந்து கட்டி ஓடுகின்றவர்களும் உடம்பைத் திருத்த முயலுவதில்லை.

மூன்றாவதாக உள்ளது மனம். அதைச் செம்மைப்படுத்திக் கொள்ள முயல்வது மிக மிக குறைவு. விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலரே இந்த முயற்சியைச் செய்கிறார்கள். உண்மையாகப் பார்த்தால் இந்தத் துறையில் தான் பலரும் முயல வேண்டும். ஏன் என்றால் இங்குதான் முயற்சிக்கு ஏற்ற கூலி உண்டு. மனதைப் பொறுத்தவரையில் பரந்த உலகத்தின் தாக்குதல் குறைவு ; இயற்கையின் தாக்குதல் மிகக் குறைவு உடம்பின் தாக்குதல் ஓரளவு உள்ளது. எந்த சூழ்நிலையில் இருந்தாலும் எப்படிப்பட்ட உடம்பினுள் இருந்தாலும் ஒருவர் விடாமல் முயன்றால் விரும்பியபடி மனத்தை வைத்துக் கொள்ள முடியும்.

1) "உடம்பை திருத்த வழி" என ஆசிரியர் கூறுவது யாது?
2) மனத்தின் செயற்பாடாக எவற்றை கூறுகின்றார்?
3) ஆசிரியர் கையாண்ட மொழிநடை பற்றி குறிப்பிடுக
4) உடம்பு ஏன் கெடுகின்றது? (4x4=16 புள்ளிகள்)

பகுதி - II

03. திருவள்ளுவரின் வினைசெயல் வகை என்னும் அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு
அ) வினைசெய்யும் திறம்
ஆ) வலியாள் வினைசெய்யும் திறன்
இ) உளவறிந்தவனைக் கொண்டு காரியத்தை முடிக்கும் தன்மை.
ஈ) மெலியாள் செய்யும் திறன் (4x5 = 20 புள்ளிகள்)

04. கைகேகி சூழ் வினைப் படலத்தை அடிப்படையாகக் கொண்டு.
அ) கையேகியின் மொழிகேட்ட தசரதனின் கோபநிலை.
ஆ) காலை இயற்கை நிகழ்ச்சி
இ) கம்பன் கையாண்ட தற்குறிப்பேற்ற அணிகள் மூன்றினை எடுத்து அதன் சிறப்பினை ஆராய்க. (8+7+5 = 20 புள்ளிகள்)

05. தேம்பாவணி என்ற நூலை அடிப்படையாகக் கொண்டு.
அ) வானவன் உரைகேட்ட சூசையின் மனநிலை.
ஆ) யேசுநாதரின் சிறப்பு
இ) யூதேய நாட்டுத் துன்பநிலை (6+8+6=20 புள்ளிகள்)

06. பாரதி பாடல் என்ற உரைநடை நூலில் சுவாமி விபுலாநந்தர்
அ) பாரதி பாடலில் காணப்படும் தெய்வீக மணம்
ஆ) இயற்கையோடு அவர் கொண்ட ஈடுபாடு
இ) பாரதியின் மொழிநடைச் சிறப்புப்பற்றி தெளிவுபடுத்துக. (7+7+4=20 புள்ளிகள்)

07. நீண்ட பயணம் என்னும் நாவலை ஆதாரமாகக் கொண்டு
அ) இதில் இடம்பெற்ற செல்லத்துரையன், மாதவன், வள்ளி ஆகிய கதாபாத்திரங்களின் முக்கியத்துவத்தை விளக்குக.
ஆ) அக்கால சமூக சூழ்நிலையை தெளிவுபடுத்துக.
இ) இந்நாவலில் காணப்படும் பண்பாட்டுக் கோலங்களை எடுத்துக்காட்டுக.
(9+6+5=20 புள்ளிகள்)

08. பின்வருவனவற்றில் எவையேனும் இரண்டினை விளக்குக.
அ) சிலப்பதிகாரத்தில் கண்ணகியின் துன்பநிலை
ஆ) சீறாப்புராணத்தில் மழையில்லாது வறட்சியினால் உயிர்கள் அடைந்த துயரம்
இ) யுகசந்தி என்னும் சிறுகதையில் சமூக மாற்றம் சித்திரிக்கப்படுமாற்றினை விளக்குக.
ஈ) சீபர்ப்பத மலை பற்றிய சுந்தரரின் தேவாரத்தில் இயற்கைக் காட்சி (2x10=20 புள்ளிகள்)

சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய

11) பின்வருவனவற்றுள் வினைத்தொகையாக அமைவது
1) கடிநகர் 2) காரிருள் 3) செந்தாமரை
4) கொல்களிறு 5) மணல்மேடு

12) குன்றினில் தீபம். இத் தொடரில் இடம்பெற்றுள்ள வேற்றுமை
1) இரண்டாம் வேற்றுமை 2) மூன்றாம் வேற்றுமை
3) ஐந்தாம் வேற்றுமை 4) ஏழாம் வேற்றுமை
5) நான்காம் வேற்றுமை

13) எல்லோரும் வந்தனர் என்பதில் வரும் உம் இடைச்சொல் தரும் பொருள்
1) எண்ணுப் பொருள் 2) முற்றுப்பொருள் 3) தெரிநிலைப்பொருள்
4) ஐயப் பொருள் 5) எதிர்மறைப் பொருள்

14) பின்வருவனவற்றுள் துணைவினையாக வந்த தொடர்
1) காவலிருந்தாள் 2) இருந்தாள் 3) வீற்றியிருந்தாள
4) மழைவிட்டது 5) வந்திருந்தார்

15) கல்லாதவரும் நனி நல்லர் என்பதில் நனி என்பது
1) பெயர்ச்சொல் 2) உரிச்சொல் 3) வினைச்சொல்
4) திரிசொல் 5) இடைச்சொல்

16) இயல்புப் புணர்ச்சியாய் அமைந்த சொற்றொடர்
1) மரச்சோலை 2) பலாப்பழம் 3) பலாமரம்
4) மரவேர் 5) பாற்செம்பு

17) குசினி, பட்டாளம் என்பவை எம்மொழிச் சொற்கள்
1) பிரெஞ் 2) மராத்தி 3) சிங்களம்
4) ஒல்லாந்து 5) மலையாளம்

18) பின்வருவனவற்றுள் செயப்படுபொருளை ஏற்காத வினைமுற்று
1) படித்தான் 2) எழுதினான் 3) சிரித்தான்
4) பாடினான் 5) கண்டான்

19) இருதிணை மூவிடங்களுக்கும் பொதுவான பெயர்
1) தந்தை 2) நீயிர் 3) எல்லாம்
4) தாய் 5) நாங்கள்

20) பாசி என்பது பிறப்பதற்கு அடியாயமைந்த உரிச்சொல்
1) பச்சை 2) பசலை 3) பசுமை
4) பசு 5) பசிய

(20 புள்ளிகள்)

ஆ. பின்வரும் ஐந்து வினாக்களுக்கும் சுருக்கமான விடை தருக.

1) வினைத்தொகை என்பதை விளக்கி, மூன்று வினைத்தொகை உதாரணம் தருக.

2) செயப்படுபொருள் குன்றியவினை, செயப்படுபொருள் குன்றாவினைகளுக்கு உதாரணம் தந்து விளக்குக.

3) தன்மைப் பெயர்கள் இரண்டினைத் தந்து, அவை இரண்டாம் வேற்றுமை உருபு ஏற்கும் போது ஏற்படும் மாற்றத்தைக் கூறுக.

4) முற்றியல் உகரம் என்றால் என்ன? அதன் மாத்திரை எத்தனை?

5) நால்வகை பாக்களையும் கூறுக. (10 புள்ளிகள்)

02. அ. பின்வரும் உரைப்பகுதியின் சாராம்சத்தை 40 சொற்களில் சுருக்கி எழுதுக.

தமிழ் நில மன்னர்கள் தமிழ்ப் புலவர்களைத் தம் உயிரினுஞ் சிறந்தாராக மதித் தொழுகிய செய்திகள் பற்பல உள்ளன. அம் மன்னர்க்கு அரசியற் சூழ்ச்சிக்குரிய அமைச் சராகவும் அறிவுரை கூறி நன்று தீதுணர்த்தி நல்லாற்றின் நிறுத்தும் ஆசிரியராகவும், அவர் குடிக்கண் உடன் தோன்றினார் முதலியவர் பால் நடு நின்று அறிவுரை கூறி, அதனைத் தீர்த்து அவரை அன்பு நிலைப்படுத்தும் அக்குல முதியோராகவும் விளங்கினார். நம் தமிழ்ப் பெரும் புலவரே யாவர். முதுமையின் தளர்ச்சியிற் கதுமென நேரும் இறப்பு முதலியவை பற்றிய அச்சம் நிகழாவண்ணம், உடல், இளமை, பொருள் முதலியவற்றின் நிலையாமை களை நெஞ்சத்திற் பதியுமாறு எடுத்துரைத்து மெய்யுணர்வில் தலைப்படுத்தும் அறவோராகவும், காதலிகந்து கைவிடப்பட்ட கற்பரசியாரை அவர்தம் கணவரோ டியைத்து நீதி பல கூறி நெறி பிறழா வண்ணம் வாழ்க்கை நிலைப்படுத்தும் நல்லுறவினராகவும் விளங்கிய பெருமை நம் தமிழ்ப்புலவர் பாலதேயாம். தந்தைதாய் முதலியோரை இழந்து வருந்தும் இளம் பருவத்துப் பெண் மக்கட்கு அத்தந்தை தாயார் முதலிய உறவாக நின்று நீதி வழாத நிலையிற் பாதுகாத்து நட்புக் கடனாற்றிய பெரியாரும் தமிழ்ப் புலவர் பெருமானே யாவர். புணர்ச்சி பழகுதலின்றி உணர்ச்சி வாயிலாகவே நட்பு முதிரப் பெற்றும் அந்நாட்டார்க்கு இறுதி நேர்ந்துழி அதனைத் தம் உணர்ச்சிச் சிறப்பான் இயல்பில் தெரிந்து தம் உயிரையும் உடன் உய்த்து அன்புக் கடனாற்றிய ஆற்றவிந்தடங்கிய கொள்கை சான்றோரும் நம் தமிழ்ப்புலவரேயாவார்.

(10 புள்ளிகள்)

ஆ. பின்வரும் உரைப்பகுதியை வாசித்து, கீழ்க் காணும் வினாவிற்கு விடை தருக.

அறிவிலக்கியம் நேரடியாக சிந்தனையோடு பேசுகிறதென்றால் ஆக்க இலக்கியத்தின் நேரடித் தொடர்பு மனித இதய மெனலாம். விளக்கமாகச் சொல்வதனால் அறிவிலக்கியம் என்பது மனித இதயத்தினூடாகவே அறிவைச் சென்றடைகின்றது. அறிவு சார்ந்த சாஸ் திரங்கள் அவ்வச் சாத்திரங்களோடு தொடர்புடையவர்களுக்கும் மட்டுமே விளங்கக் கூடியவை ஆயின் ஆக்க இலக்கியங்கள் அவ்வாறல்ல. அது கேட்போர் அல்லது வாசிப் போர் அனைவரதும் உள்ளத்தை ஈர்த்து விடும். எனவே உலகின் எத்திறத்தாரை ஆக்க இலக்கியம் தன்பால் ஈர்க்கின்றது. இதற்கு காரணமாக அமைவது இலக்கியங்களில் காணப் படும் கலையழகேயாகும். கலை ஈடுபாட்டோடு கலைஞனால் சிருஷ்டிக்கப்படுவதே ஆக்க இலக்கியமாகும். ஒரு இலக்கியத்தை ஒருவன் படைக்கும் போதும் அதை ஒருவன் ரசிக்கும் பொழுதும் இச் செயற்பாட்டிற்கு காரணமாக அமைவது கலை உணர்வேயாகும். ஏதாவது ஒரு விடயத்தை சொல்ல விரும்பும் ஒருவன் அதை ஓர் கட்டுரையாக எழுதாமல் கவிதையாக அல்லது சிறுகதையாக அதை எழுத முற்படுவானாயின் அதற்கு காரணமாக அமைவது அவனுடைய கலையுணர்வு அழகு ஈடுபாடேயாகும். என நாம் கூறலாம். எனவே இலக்கியம் எனவரும் போது கலையழகு முக்கியத்துவம் மிக்கதோர். அம்சமாக விளங்கு கிறது. எனவே கலையிலக்கியத்தை விலக்கி ஆக்க இலக்கியத்தை அணுகவோ ரசிக்கவோ முடியாது. இந்தவகையில் இலக்கியத்திற்கு கலை அழகு முதன்மையான அம்சமாகின்றது.

இலக்கியம் கற்பதன் பயன் வெறும் அறிவியல் ஈட்டம் என்பதை கண்டோம், அறிவிய லீட்டம் தான் இலக்கியம் என்றால் அதற்கு நாம் இலக்கியத்தை நாடவேண்டிய தேவை யில்லை செவ்வானம் பற்றி அறிவுதான் நமது நோக்கம் என்றால் அது பற்றிய விஞ்ஞானக் கட்டுரை யொன்றை வாசித்து அறிந்து கொள்வதுடன் அது முடிந்துவிடும். செவ்வானம் பற்றிய ஒரு கவிதையைத் தேடி வாசிக்க வேண்டிய அவசியமில்லை. எனவே இலக்கியம் கற்பதன் பயன் அறிவியல் ஈட்டமல்ல அழகியலுக் கூடான அனுபவ ஈட்டமே இலக்கியம் கற்பதன் பயன் எனலாம்.

1) அறிவிலக்கியத்திற்கு ஆக்கவிலக்கியம் இரண்டிற்கும் இடையிலான வேறுபாடு யாது?

2) கலை இலக்கிய உணர்வுடையன் செயல் எவ்வாறு இருக்கும்?

3) இலக்கியத்தின் முதன்மையாக அமைபவை யாவை?

4) இலக்கியம் கற்பதனால் ஏற்படும் நன்மைகள் யாவை?

5) இலக்கியம் தோன்றக் காரணங்கள் யாவை? (10 புள்ளிகள்)

03. பின்வருவனவற்றுள் யாதேனும் ஒரு தலைப்பைத் தெரிந்து, 300 - 350 சொற்கள் கொண்ட கட்டுரை எழுதுக.

அ) இலக்கியமும் சமூகமும்.

ஆ) தகவல் தொழில்நுட்பம்.

இ) பேச்சுத் தமிழும் இலக்கியத் தமிழும்.

ஈ) புலம்பெயர் வாழ்மக்கள் இலக்கியம்.

உ) இலக்கியமும் திரைப்படமும்.

ஊ) கல்வியழகே அழகு. (20 புள்ளிகள்)

பகுதி - II

பிரிவு - அ

04. அ) சங்ககாலப் புறத்திணை பற்றி இலக்கியங்களூடாக தெளிவுபடுத்துக.

ஆ) அகத்திணை இலக்கியத்தில் முதல், கரு, உரி, பொருள் இடம்பெறுமாற்றினை விளக்குக.

இ) இம்மரபு பல்லவர்கால பக்தி இலக்கியங்களில் எவ்வாறு பின்பற்றப்பட்டு வந்துள்ளமை என்பதை விளக்குக.

05. அ) சங்கமருவிய கால இலக்கியத்தை பட்டியல்படுத்திக் காட்டுக.

ஆ) சோழர்காலக் காப்பியங்களை கூறி, காப்பியப் பண்பினை தெளிவுபடுத்துக.

இ) பல்லவர்கால இலக்கியத்தில் காணப்படும் பக்திசாரா இலக்கியங்களைக் கூறி, பண்பினையும் எடுத்துக் காட்டுக.

06. அ) விஜயநகர நாயக்கர் காலப்பகுதியில் தோற்றம்பெற்ற இலக்கியங்களைக் கூறுக.

ஆ) விஜயநகர நாயக்கர் கால தனிப்பாடலில் காணப்படும் புலவர்களின் ஆளுமையை தெளிவுபடுத்துக.

இ) அக்காலத்திலெழுந்த பொதுமக்கட் சார்புடைய இலக்கியங்கள் பற்றி விபரிக்குக.

பிரிவு - ஆ

07. அ) ஆரியச்சக்கரவர்த்தி காலத்தில் தோற்றம்பெற்ற இலக்கியங்களை பட்டியல்படுத்துக.

ஆ) இக்காலப் புராண இலக்கியங்கள் பற்றி விளக்குக.

இ) ஈழத்துப் பூதந்தேவனார் பற்றிய கருத்துகளை தெளிவுபடுத்துக.

08. அ) போர்த்துக்கேயர் காலத்தில் இலங்கையில் எழுந்த தமிழ் இலக்கியங்கள் பற்றி விளக்கி எழுதுக.

ஆ) ஒல்லாந்தர்கால இலக்கியங்களை வகைப்படுத்தி, அதன் தனித்துவப் பண்பினை தெளிவு படுத்துக.

இ) ஒல்லாந்தர் காலம்வரை எழுந்த பள்ளு பிரபந்தம் பற்றிக் குறிப்பிடுக.

சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய
சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய
சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய
சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய சிப்ர உதானய

சிப்சர உதானய செயலமர்வு
கல்விப் பொதுத் தராதர உயர் தரப் பரீட்சை 2013

அரசியல் விஞ்ஞானம் - 1

இரண்டு மணித்தியாலங்கள்

1) அரசறிவியலில் ஆராயப்படும் தலைப்புகளை உள்ளடக்கிய சரியான சேர்மானத்தை தெரிவு செய்க.
   A. மனிதர்களுக்கிடையிலான சமூக உறவுகளை ஆராய்கிறது
   B. மனிதர்களின் குடும்ப உறவுகளை ஆராய்கிறது
   C. அரசியல் முறைமையின் கட்டமைப்புகளையும் பணிகளையும் ஆராய்கிறது
   D. மனிதர்களின் அரசியல் நடத்தையை ஆராய்கிறது
   E. அரசியல் முறைமையின் செயன்முறையினை ஆராய்கிறது
   1. ABC 2. ABD 3. BCD 4. ACD 5. CDE

2) நடத்தை வாதத்துக்குப் பொருத்தமான சரியான சேர்மானத்தை தெரிவு செய்க.
   A. நடைமுறைசார்ந்த காரணிகளின் அடிப்படையில் மனித நடத்தையைப் பகுப்பாய்வு செய்வதில் கவனம் செலுத்துகிறது
   B. அரசறிவியலை ஆய்வு செய்வதற்கு விஞ்ஞான முறைகளைப் பிரயோகிக்க வேண்டுமென வலியுறுத்துகிறது
   C. அனுமானங்கள், கருதுகோள் என்ற வகையில் ஆய்வு செய்கிறது
   D. கற்பனைகள், எதிர்பார்ப்புகள் என்ற வகையில் அரசறிவியலை ஆய்வு செய்கிறது
   E. கோட்பாடுகளுக்கும் ஆய்வுகளுக்குமிடையில் பரஸ்பரம் தங்குநிலையினை இது வலியுறுத்துகின்றது
   1. ABC 2. ABD 3. BCD 4. ACD 5. ABE

3) அரசறிவியலோடு நெருக்கமான தொடர்புடைய ஏனைய சமூக விஞ்ஞானங்களைக் குறிப்பிடும் சரியான வரிசையை தெரிவு செய்க.
   A. பொருளியல், சமூகவியல், மெய்யியல், வரலாறு
   B. பொருளியல், சமூகவியல், மெய்யியல், வானவியல்
   C. பொருளியல், சமூகவியல், மெய்யியல், பௌதீகவியல்
   D. பொருளியல், சமூகவியல், மெய்யியல், புவியியல்
   E. பொருளியல், சமூகவியல், மெய்யியல், புவியியல், வரலாறு
   1. ABC 2. ABD 3. BCD 4. ACD 5. ADE

4) நகர அரசு முறைமைக்குப் பொருத்தமான சரியான சேர்மானத்தை தெரிவு செய்க.
   A. நகர அரசில் நேரடி ஜனநாயகமுறை பின்பற்றப்பட்டது
   B. நகர அரசில் சகலருக்கும் அரசியல் உரிமை வழங்கப்பட்டிருந்தது
   C. ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமஉரிமை வழங்கப்பட்டிருந்தது
   D. ஆண் பிரஜைகள் மட்டுமே அரசியல் செயன்முறையில் பங்குபற்றினர்
   E. அரசாங்க செயற்பாடுகள் பணிசார் அடிப்படையில் பிரிக்கப்படவில்லை
   1. ABC 2. ABD 3. BCD 4. ACD 5. ADE

5) தேசிய அரசுகளுக்குப் பொருத்தமான சரியான சேர்மானத்தைத் தெரிவு செய்க.
   A. ஐ.நா. சபையின் உறுப்புரிமை பெற்ற நாடுகளே தேசிய அரசுகள் எனக் கருதப்படலாம்
   B. பாப்பரசரினாலும் திருச்சபையினாலும் கட்டுப்படுத்தப்படும் அரசுகளே தேசிய அரசுகளாகக் கருதப்பட முடியும்
   C. தேசிய அரசுகளை உருவாக்கும் கூறுகள் மக்கட் தொகை, நிலம், இறைமை அரசாங்கம் ஆகியனவாகும்

D. தேசிய அரசுகள் ஒரு தேசம் - ஒரு நாடு என்ற தத்துவத்தின் அடிப்படையில் உருவாகியுள்ளன

E. நிலம், மக்கள் தொகை, அதிகாரம் என்பவற்றில் எவ்வேறுபாடுகள் இருப்பினும் சகல தேசிய அரசுகளும் சமமானவையாகக் கருதப்படும்

1. ABC 2. BCD 3. BCA 4. ABE 5. CDE

6) சமூகம் என்பதற்குப் பொருத்தமற்ற கூற்றினை தெரிவு செய்க.
1. சமூகம் அரசை விட காலத்தால் முந்தியது
2. சமூகம் இறைமை எனும் அதிகாரத்தைக் கொண்டுள்ளது
3. அரசைவிட சமூகம் பரந்துபட்டதாகும்
4. மனித்ன் இயல்பாகவே தனித்து வாழ முடியாதபடியால் சமூகமாக வாழ்கிறான்
5. சமூகம் மனிதரின் சமூக நடத்தையில் செல்வாக்கு செலுத்துகிறது

7) ஏனைய சமூக நிறுவனங்களுக்குப் பொருத்தமற்ற கூற்றினைத் தெரிவு செய்க.
1. இவை மனிதரின் தனிப்பட்ட நலன்களை மேம்படுத்தும் நோக்கில் ஆரம்பிக்கப்படுவன
2. இவற்றின் உறுப்புரிமை விருப்பத்திற்குரியது
3. இவை அரசின் இறைமைக்கு உட்படாதவை
4. ஒருவர் ஒரே நேரத்தில் எத்தனை நிறுவனங்களிலும் உறுப்பினராக இருக்கலாம்
5. விரும்பாதபோது உறுப்புரிமையை நீக்கிக்கொள்ளலாம்

8) இறைமைக் கோட்பாட்டுக்குப் பொருத்தமற்ற கூற்று
1. அது அரசின் அதிகாரத்தை விளக்குகிறது
2. அது தன்னிகரற்றதும் ஒருமையானதும்
3. அது பிரிக்கமுடியாததும் வேறு ஒரு சாராரிடம் ஒப்படைக்க முடியாததும்
4. சிறிய அரசுகளை விட பெரிய அரசுகள் கூடுதலான இறைமையை அனுபவிக்கின்றன
5. பருமன் எதுவாயினும் சகல அரசுகளும் சமமான இறைமை அதிகாரம் உடையன

9) ஜனாதிபதி அரசாங்கமுறைக்குப் பொருத்தமற்ற கூற்றினை தெரிவு செய்க.
1. சட்டத்துறையும் நிருவாகத்துறையும் வெவ்வேறாகத் தெரிவு செய்யப்படுகின்றன
2. ஒவ்வொரு நிறுவனமும் அரசியல் யாப்பினால் ஒதுக்கப்பட்ட சுதந்திரமான அதிகாரத்தைப் பெற்றுக் கெள்கின்றது
3. சட்டத்துறை நிர்வாகத்துறையை பதவியிலிருந்து நீக்கமுடியாது
4. அரசின் தலைவர், அரசாங்கத்தின் தலைவர் ஆகிய இரு பணிகளும் ஜனாதிபதிப் பதவியில் குவிந்துள்ளன.
5. ஜனாதிபதி நேரடியாக மக்களினால் அல்லது தேர்தல் கல்லூரியினால் தெரிவு செய்யப்படுகிறார்.

10) மந்திரிசபை அரசாங்க முறைக்குப் பொருத்தமற்ற கூற்றினை தெரிவு செய்க.
1. நிருவாகம் உண்மை நிருவாகம் நாம நிர்வாகம் என்ற இரு பகுதிகளை கொண்டுள்ளது
2. நாம நிர்வாகம் உண்மை நிர்வாகத்தை நியமிக்கிறது
3. உண்மை நிர்வாகம் நாம நிர்வாகத்திற்குப் பொறுப்புக் கூற வேண்டும்
4. சட்டத்துறை நம்பிக்கையில்லா பிரேரணை ஒன்றை நிறைவேற்றுவதன் மூலம் உண்மை நிருவாகத்தை பதவி நீக்கம் செய்ய முடியும்
5. பிரதமர் தலைமையிலான மந்திரி சபையே உண்மை நிர்வாகமாகும்

11) ஒற்றையாட்சி முறைக்குப் பொருத்தமற்ற கூற்றினை தெரிவு செய்க.
1. அரசின் இறைமை அதிகாரம் ஒரேயொரு அரசாங்கத்திடம் ஒருமுகப்படுத்தப்பட்டிருத்தல்
2. மத்திய மாநில அரசுகளாகப் பிரிக்கப்பட்டு இறைமை அதிகாரம் பன்முகப்படுத்தப்பட்டிருத்தல்
3. நிருவாக ஒரினத்தன்மை
4. உள்ளூர் ஆட்சி மன்றங்கள் மத்திய அரசாங்கத்தினால் ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்களை மட்டும் பெற்றிருத்தல்
5. ஐக்கிய இராச்சியம் ஒற்றையாட்சி முறைக்கு சிறந்த உதாரணமாக விளங்குதல்

12) சமஷ்டி அரசாங்கமுறைக்கு பொருத்தமற்ற கூற்றைத் தெரிவு செய்க.
1. எழுதப்பட்ட யாப்பும் அதன் உயர்தன்மையும்
2. அரசின் இறைமை மத்திய மாநில அரசுகளுக்கிடையே பன்முகப்படுத்தப்பட்டிருத்தல்

3. மத்திய மாணிய அரசுகள் சுதந்திரமாக செயல்படுதல்
4. அதிகாரம் தொடர்பான தகராறுகளை தீர்த்து வைக்க உயர்நீதி மன்றம் ஒன்று இடம் பெறல்
5. மத்திய அரசாங்கம் தனியாக அரசியல் யாப்பை திருத்த முடிதல்

13) அழுக்கக் குழுக்களுக்குப் பொருத்தமற்ற கூற்று
1. அவை தேர்தல் அல்லது வன்முறையினூடாக அரசியல் அதிகாரத்தை கைப்பற்ற முயற்சிக்கின்றன
2. அவை தனிப்பட்ட நலன்களை பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் தாபிக்கப்பட்டுள்ளன.
3. அவை கொள்கை வகுப்போருக்கு தகவல்களை வழங்கும் மூலாதாரமாக செயற்படுகின்றன
4. அவை அரசாங்க செயற்பாடுகள் பற்றி மக்களை விழிப்புடன் இருக்கச் செய்யும் ஊடகமாக செயற்படுகின்றன
5. அரசியல் கட்சிகளுக்கு அப்பாற்பட்டு பொதுசன அபிப்பிராயத்தை உருவாக்குகின்றன

14) உரிமைகள் பற்றிய பொருத்தமற்ற கூற்று யாது?
1. வாழ்க்கையை மகிழ்வித்து வளமாக்குவதற்கு ஏதுவான வகையான சமூகம் ஏற்றுக்கொள்ளும் கோரிக்கைகளே உரிமைகளாகும்
2. உரிமைகளும் கடமைகளும் ஒன்றிணைந்துள்ளன
3. வாழும் உரிமையின் கீழ் உயிரை மாய்த்துக் கொள்ளும் உரிமையும் இடம்பெறுகிறது
4. உரிமைகள் சமூகத்தில் தோன்றியிருப்பதால் சமூகம் இன்றி உரிமைகள் இல்லை
5. உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கு அவற்றை அரசியல் யாப்பில் இடம்பெறச் செய்வது சிறந்ததாகும்

15) ஒப்பங்கோடல் பற்றிய பொருத்தமற்ற கூற்றை தெரிவு செய்க.
1. அது நேரடி ஜனநாயகத்தை நடைமுறைப்படுத்த உதவுகிறது
2. அது அரசாங்க சட்டங்களின் சட்டமுறையான தன்மையை அதிகரிக்க செய்கிறது
3. அதனை சட்டவாக்கப் பணியின் சுமையைக் குறைக்க பயன்படுத்தலாம்
4. ஒப்பங்கோடல் முறை வளர்ச்சியடைந்த ஜனநாயக நாடுகளில் பின்பற்றப்படுகிறது
5. அதனை பொதுத் தேர்தலுக்கான ஒரு பிரதியீடாக பயன்படுத்த முடியும்

16) அமெரிக்க காங்கிரஸ் பற்றிய பிழையான கூற்றை தெரிவு செய்க.
1. செனட்சபை மாகாண அரசுகளை பிரதிநிதித்துவப்படுத்துகிறது. பிரதிநிதிகள் சபை மக்களை பிரதிநிதித்துவப்படுத்துகிறது.
2. பிரதிநிதிகள் சபையை ஜனாதிபதி கலைத்துவிட முடியும்
3. ஒரு சபையில் ஆரம்பிக்கப்படும் சகல மசோதாக்களும் மற்றைய சபையின் அங்கீகாரத்தையும் பெறவேண்டும்
4. காங்கிரஸ் நிர்வாக அதிகாரத்தை தடைகளுக்கும் சமன்பாடுகளுக்கும் உட்படுத்தலாம்
5. அமெரிக்க காங்கிரஸ் பிரதிநிதிகள் சபை, செனட் என இரு சபைகளை கொண்டுள்ளது

17) பிரான்ஸிய அரசாங்க முறை பற்றிய பிழையான கூற்றை குறிப்பிடுக.
1. பிரான்ஸில் நிர்வாகத்தின் செயற்பாடுகள் நீதிப்புணராய்வுக்கு உட்படுத்தப்படுவதில்லை
2. ஒப்பங்கோடல்களை நடாத்துவதில் பாராளுமன்றத்துக்கு எவ்வித பங்கும் இல்லை
3. நிர்வாக மற்றும் வர்த்தக குற்றங்களுக்கு தனியான நீதிமன்றம் அங்கு காணப்படுவதில்லை
4. பிரான்ஸிய முறை ஜனாதிபதி மற்றும் பாராளுமன்ற அரசாங்கமுறை பண்புகளைக் கொண்டுள்ளன.
5. பிரான்ஸின் தற்போதைய அரசாங்க முறை 5ம் குடியரசு யாப்பின்படி ஏற்படுத்தப்பட்டதாகும்

18) முரண்பாடு தீர்த்தலின் அடிப்படை நோக்கமாவது,
1. ஒரு தரப்புக்கு வெற்றி கிடைப்பது
2. இரு தரப்பிற்கும் வெற்றி கிடைப்பது
3. இரு தரப்பிற்கும் தோல்வி கிடைப்பது
4. ஒரு தரப்பிற்கு மாத்திரம் அதிக வெற்றி கிடைப்பது
5. முரண்பாட்டு தரப்பு நீதிமன்ற முன்னிலையில் ஆஜராவது

19) சர்வதேச அரசியலில் பிரதான வகிபாகத்திற்கு பொருத்தமற்றது எது?
1. சுதந்திர இறமை மிகு தேசிய அரசுகள்
2. பல்தேசிய கம்பனிகள்
3. சர்வதேச ஸ்தாபனங்கள்
4. அரச சார்பற்ற அமைப்புக்கள்
5. தனிநபர்

20) அமெரிக்க அரசியல் கட்சிகள் தொடர்பாக பொருத்தமற்ற கூற்று யாது?
1. அமெரிக்க அரசியல் கட்சிகள் தேர்தல் தொகுதி இயந்திரங்கள் ஆகும்
2. கூட்டாட்சிவாதிகள் கட்சி மிக பழமையானதாகும்
3. இரு பிரதான கட்சிகள் அதிக செல்வாக்கை பெற்றுள்ளன
4. வித்தியாசமான இரு போத்தல்களில் அடைக்கப்பட்ட ஒரே மாதிரியான மதுவுக்கு சமமானவை
5. பாதுகாப்பு வெளியுறவு துறை என்பவற்றில் இரு பிரதான கட்சிகளும் ஒரே மாதிரியான கருத்தை கொண்டவை

21) நல்லாட்சி ஒன்றின் மூலமாக அமையாதது யாது?
1. வெளிப்படைத்தன்மை
2. ஆதிக்க வாதம்
3. பொறுப்பு
4. சமூகமதிப்பீடு
5. சட்டத்தின் ஆட்சி

22) கீழே தரப்படும் காரணிகளுள் அரசியல் யாப்பு ஒன்றினுள் உள்ளடக் முடியாதது எது?
1. அரசாங்கத்தின் 3 ஆட்சிப்பரிபாலன துறைகளின் அதிகாரத்தை பகிர்ந்தளித்தல்
2. யாப்பினை திருத்துவதற்குரிய வழிமுறைகள்
3. உயர்தர அரச ஊழியர்களை உள்வாங்குதற்கான செயற்பாடுகள்
4. பிரதிநிதித்துவமுறைமை
5. திறந்த சந்தைமுறையை செயற்படுத்தல்

23) எழுதப்படாத யாப்பொன்றிற்கு மிகப் பொருத்தமான கூற்றை தெரிவு செய்க.
1. யாப்பினை சாதாரண பெரும்பான்மை வாக்கால் மாற்ற முடிதல்
2. எழுத்துருவம் பெற்ற சட்டங்களாக காணப்படுதல்
3. உயர்நீதிமன்ற அனுமதியுடன் யாப்பை திருத்துதல்
4. விசேடவழிமுறைகள் மூலம் யாப்பு சட்டங்களை திருத்துதல்
5. மக்கள் தீர்ப்பின் மூலம் யாப்பு சட்டத்தை திருத்துதல்

24) குறைந்த பட்ச அரசு என்பதால் கருதப்படுவது யாது?
1. முழுமையாக நிர்வகிக்கப்படாத அரசாகும்
2. அதிகமாக நிர்வகிக்கப்படுகின்ற அரசாகும்
3. பொருளாதாரத்தை மிக குறைந்த அளவில் முகாமை செய்யும் அரசாகும்
4. சமூக நலன்களுக்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்த அரசாகும்
5. சமூக ஜனநாயக தத்துவத்தை ஏற்று கொண்ட அரசாகும்

25) தாராள ஜனநாயக அரசாங்கமுறை ஒன்றின் அடிப்படை இயல்புகளில் அடங்காதது யாது?
1. சட்டத்தின் ஆட்சி
2. யாப்புவாதம்
3. சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல் முறைமை
4. ஊடக சுதந்திரம்
5. தனிக்கட்சி ஆட்சிமுறை

26) 1833 கட்டாய இராஜகாரிய முறை நீக்கம் தொடர்பான பொருத்தமற்ற கூற்று யாது?
1. சுதந்திர உழைப்புச் சந்தையை உருவாக்குவதற்கான தடையை நீக்கியது
2. பெருந்தோட்டத்தொழிலின் வளர்ச்சிக்குரிய தளத்தை உருவாக்கியது
3. சேவையோடு கூடிய அடிமை மரபு முறையை முடிவுக்குக் கொண்டு வந்தது
4. 1833ல் அது நீக்கப்பட்ட பின் மீண்டும் இராஜகாரிய முறை புதுப்பிக்கப்படவில்லை
5. வீதி நிர்மானத்திற்கு ஊழியப் பற்றாக்குறையை உருவாக்கியது

27) 19ம் நூற்றாண்டின் பெருந்தோட்டத்தொழிலின் ஆரம்பத்துடன் தொடர்பற்ற கூற்று யாது?
1. இலங்கை உலக பொருளாதாரத்தின் பங்குதாரராக மாறுவதற்கு வழிசமைத்தது
2. வேளிநாட்டு மூலதனத்தில் உயர்ந்த அளவு தங்கியிருக்கும் பொருளாதாரத்தை உருவாக்கியது
3. நவீன வங்கிமுறையின் தோற்றத்தை எளிதாக்கியது
4. இலங்கையில் நாடற்றவர் பிரச்சனை ஆரம்பமாகக் காரணமாயிற்று
5. மரபுசார் நெல் விவசாயத்தை பொருளாதாரச் செயற்பாட்டு மையமாக ஆக்கியது

28) கமரூன் ஆணைக்குழுவின் எதிர்பார்ப்புடன் தொடர்பற்ற கூற்று யாது?
1. நீதித்துறையின் சுதந்திரத்தை எதிர்பார்த்தது
2. முழுநீதி நிர்வாகமும் உயர் நீதிமன்றத்திற்குரியதாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்த்தது
3. மாவட்ட நீதிமன்றுகளை ஆரம்பிக்க வேண்டுமென எதிர்பார்த்தது
4. கோல்புறூக் ஆணைக்குழுவுடன் இணைந்து செயற்பட்டது
5. வெளிநாட்டவர்களுக்கு விசேட நீதிச் செயன்முறை வழங்குவதை எதிர்பார்த்தது

29) கோல்புறூக் ஆணைக்குழு சிபார்சு செய்த சட்டசபை தொடர்பான பிழையான கூற்று எது?
1. உத்தியோக சார்புடைய – சார்பற்ற உறுப்பினர்களைக் கொண்டமைந்தது
2. ஐரோப்பிய முதலீட்டாளர்களுக்குப் பிரதிநிதித்துவத்தை வழங்கியது
3. தேசாதிபதியால் தலைமை தாங்கப்பட்டது
4. தேசாதிபதிக்கு விசேட அதிகாரங்கள் வழங்கப்பட்டன
5. உத்தியோக சார்பற்றவர் எண்ணிக்கை பெரும்பான்மையாக காணப்பட்டது

30) டொனமூர் சிபார்சுகள் தொடர்பான பிழையான கூற்று யாது?
1. இனவாரிப் பிரதிநிதித்துவத்தை நீக்க சிபாரிசு செய்தது
2. சர்வசன வாக்குரிமையை சிபார்சு செய்தது
3. 7/10 நிர்வாகப் பொறுப்புகளுக்கு சிபார்சு செய்தது
4. ஆள்பதி அரசியல் முரண்பாடுகளிலிருந்து விடுபட்டிருப்பதை எதிர்பார்த்தது
5. டொமினியன் அந்தஸ்து வழங்குவதை சிபார்சு செய்தது

சரியான சேர்மானத்தை தெரிவு செய்க.

31) சோல்பரி யாப்பு ....
A. டொமினியன் அந்தஸ்தை வழங்கியது
B. பிரசைகளுக்கு அடிப்படை உரிமைகளை வழங்கியது
C. மந்திரிசபை அரசாங்கமுறையை அறிமுகஞ் செய்தது
D. சமமற்ற இரு மன்ற முறையை அறிமுகஞ் செய்தது
E. தேசிய அரசுப் பேரவை என்ற சிறப்புப் பெயரை பாராளுமன்றத்திற்கு வழங்கியது
1. ABC 2. ACD 3. ABE 4. BCD 5. CDE

32) சோல்பரி யாப்பு ....
A. நீதிப் புனரமைப்பு அதிகாரத்தை அறிமுகஞ் செய்தது
B. நீதிச்சேவை ஆணைக்குழுவைத் தாபித்தது
C. பகிரங்க சேவை ஆணைக்குழுவைத் தாபித்தது
D. மேற்கூறிய இரு ஆணைக்குழுக்களையும் கட்டுப்படுத்தும் அதிகாரத்தை அமைச்சரவைக்கு வழங்கியது
E. நீதிச்சேவை, அரச சேபை ஆலோகனைச் சபைகளை ஏற்படுத்தியது
1. ABC 2. BCD 3. CDE 4. ADE 5. ACE

33) முதலாம் குடியரசு யாப்பு ....
A. சுதந்திரத்துக்குப் பின்னர் தாபிக்கப்பட்ட முதலாவது சுதேச யாப்பு
B. இலங்கையை குடியரசாகப் பிரகடனப்படுத்தியது
C. மந்திரிசபை அரசாங்க முறையை தொடர்ந்தும் பின்பற்றியது
D. நிறைவேற்று அதிகாரமுடைய சனாதிபதி முறையை அறிமுகப்படுத்தியது
E. பிரித்தானிய முடியின் தலைமையை ஏற்றுக்கொண்டது
1. ABC 2. BCD 3. CDE 4. ACD 5. ADE

34) முதலாம் குடியரசு யாப்பு ...
A. சிறுபான்மையினரின் உரிமைகளுக்கு விசேட பாதுகாப்பு வழங்கியது
B. அடிப்படை உரிமைகள் பற்றிய அத்தியாயத்தை கொண்டிருந்தது
C. பௌத்தமதம் பற்றிய ஓர் அத்தியாயத்தை கொண்டிருந்தது

D. அரச கொள்கை கோட்பாடுகள் பற்றிய அத்தியாயத்தை கொண்டிருந்தது

E. ஈரவைச் சட்டமன்றமுறையை ஏற்படுத்தியிருந்தது

1. ABC 2. BCD 3. CDE 4. ADE 5. ACE

35) இரண்டாம் குடியரசு யாப்பு ....

A. நிறைவேற்று சனாதிபதி அரசாங்கமுறையை அறிமுகஞ் செய்தது

B. இரட்டை நிர்வாக முறையை அறிமுகஞ் செய்தது

C. சனாதிபதியின் அதிகாரங்களை கட்டுப்படுத்தும் தடைச்சமன்பாட்டு முறையை அறிமுகஞ் செய்தது

D. சனாதிபதி தேர்தலுக்கு மாற்றுவாக்கு முறையை அறிமுகஞ் செய்தது

E. அமைச்சரவைக்குத் தலைமை தாங்குவதிலிருந்தும் சனாதிபதியை விலக்கி வைத்தது

1. ABC 2. BCD 3. ACD 4. ABD 5. CDE

36) இரண்டாம் குடியரசு யாப்பு ....

A. போரையும் சமாதானத்தையும் பிரகடனம் செய்யும் அதிகாரத்தை சனாதிபதிக்கு வழங்கியது

B. சனாதிபதியின் மீது குற்றப்பிரேரணை கொண்டு வரும் அதிகாரத்தை பாராளுமன்றத்திற்கு வழங்கியது

C. சனாதிபதி தேர்தல் ஆட்சேபனை மனுக்களை விசாரிக்கும் அதிகாரத்தை மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு வழங்கியது

D. அடிப்படை உரிமைகள் அத்தியாயத்தை இல்லாமற் செய்தது

E. அடிப்படை உரிமைகள் அத்தியாயத்தை தொடர்ந்தும் இடம் பெறச் செய்தது

1. ABC 2. BCD 3. CDE 4. ABE 5. ACD

37 முதல் 40 வரை பொருத்தமற்ற கூற்றை தெரிவு செய்க.

37) இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை

1. 1956இற்கு முற்பட்டகாலத்தில் மேற்குச் சார்புடையதாக இருந்தது
2. 1956இன் பின்னர் அணிசேராக் கொள்கையைப் பின்பற்ற ஆரம்பித்தது
3. எப்போதும் இந்தியாவுடனான தொடர்புக்கு முக்கிய இடம் வழங்கியது
4. நாட்டின் பொருளாதார நலன்களுக்கு அதிக கவனம் செலுத்தவில்லை
5. எப்போதும் ஒரே மாதியாகக் காணப்படவில்லை

38) பிராந்திய ஒத்துழைப்புக்கான தென்னாசியச்சங்கம் (சார்க்)

1. சகல தென்னாசிய அரசுகளையும் உள்ளக்கியுள்ளது
2. பொருளாதார சமூகத் துறைகளில் பிராந்திய ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கு தாபிக்கப்பட்டது
3. இதுவரை பொருளாதாரத்துறையில் பொருள் பொதிந்த முன்னேற்றம் எதனையும் அடையவில்லை
4. இந்தோ – பாகிஸ்தானிய நெருக்கடி நிலையால் தற்போது செயலற்றுள்ளது
5. ஐ.நா சபையின் அனுமதியை பெற்றுள்ளது

39) இலங்கை பின்வரும் பொதுநலவாய அமைப்பின் வேலைத்திட்டங்களால் பயனடைந்துள்ளது

1. தொழில்நுட்ப அபிவிருத்தி உதவி
2. கொழும்புத்திட்டம்
3. பொதுநலவாய அமைப்பின் தலைவர்களின் விஜயங்கள்
4. வனவள அபிவிருத்தி திட்டம்
5. புலமைப்பரிசில் வழங்கும் திட்டம்

40) ஐக்கிய நாடுகள் தாபனத்தின் பின்வரும் அமைப்புகள் இலங்கையில் காணப்படுகின்றன

1. சர்வதேச தொழிலாளர் அமைப்பு
2. உலக வங்கி
3. சர்வதேச சஞ்சிலுவைக் குழு
4. ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டம்
5. யுனெஸ்கோ

கூற்று - I	கூற்று - II	இலக்கம்
உண்மை	உண்மை	1
பொய்	உண்மை	2
உண்மை	பொய்	3
பொய்	பொய்	4

	கூற்று - I	கூற்று - II
41)	ஐக்கிய அமெரிக்க உயர் நீதிமன்றத்துக்கு நீதிப்புனராய்வு அதிகாரம் உண்டு	காங்கிரஸ் மூன்றில் இரண்டு பெரும்பான்மை மூலம் சனாதிபதியின் இரத்து அதிகாரத்தை நிராகரிக்க முடியும். (.....)
42)	பிரான்சிய சனாதிபதி தமது சுயவிருப்பில் அமைச்சர்களை நியமிக்க முடியும்	பிரான்சின் அரசியலமைப்புப் பேரவை அந்நாட்டின் சட்டவாக்கத்தை முன் புனராய்வு செய்யும் அதிகாரம் பெற்றுள்ளது (.....)
43)	பிருத்தானியாவில் கீழ் மன்றம் நிறைவேறிய மசோதாக்களை பிரபுக்கள் சபை காலதாமதப்படுத்த முடியும்	இங்கிலாந்துப் பாராளுமன்றம் நிர்வாகத்துறையைக் கட்டுப்படுத்துகிறது (.....)
44)	இந்திய மாநில அரசுகள் இராஜ்ய சபையில் சமமான பிரதிநிதித்துவத்தைப் பெறுகின்றன	இந்திய ஜனாதிபதியை குற்றப் பிரேரணை ஒன்றின் மூலம் பதவியிலிருந்து நீக்க முடியும் (.....)
45)	சுவிட்சலாந்தில் சமஷ்டி சபை ஈரங்க சபைகள் கொண்டது 1) தேசிய சபை 2) மாநில சபை	தேசிய சபைக்கு 200பேர் விகிதாசார பிரதிநிதித்துவ முறையில் தெரிவு செய்யப்படுவார்கள் (.....)
46)	சோல்பரி அரசியலமைப்பின் கீழ் மகா தேசாதிபதி பிருத்தானிய முடியை பிரதிநிதித்துவப்படுத்தினார்	இலங்கைப் பிரதம மந்திரி பிருத்தானிய முடியின் விருப்புடன் மகா தேசாதிபதியை நியமித்தார் (.....)
47)	கொமியூனிசச் சார்புத்தின்மையே 1948 – 1956 காலப்பகுதியில் இலங்கை வெளிநாட்டுக் கொள்கையின் பிரதான பண்பாகும்	S.W.R.D பண்டாரநாயக்கா 1956இல் அணிசேராக் கொள்கையை அறிமுகம் செய்தார் (.....)
48)	ஐக்கிய நாடுகள் தாபனத்தின் பொதுச்சபை பாதுகாப்புச்சபையின் 5 நிரந்தர உறுப்பினர்களையும் நியமிக்கிறது	செயலாளர் நாயகம் பாதுகாப்புச் சபையின் கூட்டங்களுக்குத் தலைமை தாங்குகிறார் (.....)
49)	1978ம் ஆண்டு அரசியலமைப்பின் கீழ் சனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரத்தைப் பெற்றுள்ளார்	தமக்கெதிரான ஒரு குற்றப்பிரேரணை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் போது ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைக்க முடியாது (.....)
50)	1978ம் ஆண்டு அரசியலமைப்பின் கீழ் உயர் நீதிமன்றம் நீதிப்புனராய்வு அதிகாரத்தைப் பெற்றுள்ளது.	உயர் நீதிமன்றம் பாராளுமன்றம் நிறைவேற்றும் சட்டங்களின் யாப்புறு தன்மையைப் பரிசீலித்து அவை யாப்புக்கு முரணானவையாயின் அவற்றை செல்லுபடியற்றதாக ஆக்க முடியும் (.....)

சிப்ச உதானய சிப்ச உதானய சிப்ச உதானய

(07) "மனிதர் அரசியலைப் படிக்கும் வழிமுறைகள் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்படுகின்றன" அப் பகுதிகள் இரண்டையும் குறிப்பிடுக.

1) .....

2) .....

(08) மனிதர் ஏன் சட்டத்துக்குக் கீழ்ப்படிகின்றனர்? இரண்டு காரணங்களைக் கூறுக.

1) .....

2) .....

(09) "ஓர் அரசின் சுய அடையாத்தைப் பேணுவதில் அரசியல் சின்னங்கள் பிரதான பங்கினை வகிக்கின்றன." இரண்டு அரசியல் சின்னங்களைக் குறிப்பிடுக.

1) .....

2) .....

(10) பரிணாமவளர்ச்சிக் கோட்பாட்டாளரின் நோக்கின் படி மனிதர் கூட்டுச் சேர்வது தொடர்பில் செல்வாக்குச் செலுத்திய சமூக இணைப்புக் காரணிகள் இரண்டினைத் தருக?

1) .....

2) .....

(11) கோல்புறூக் - கமரன் சீர்திருத்த யோசனைகள் இரண்டினை எழுதுக.

1) .....

2) .....

(12) 1931 இல் சர்வசன வாக்குரிமை வழங்கப்படுவதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் இரண்டினை எழுதுக.

1) .....

2) .....

(13) 1947 சோல்பரி அரசியல் யாப்பின் கீழ் உருவாக்கப்பட்ட சட்டவாக்கத் துறை இருமன்ற முறையினதாகும். இச்சபைகள் இரண்டையும் எழுதுக.

1) .....

2) .....

(14) 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பிரித்தானியக் காலனித்துவத்துக்கு எதிராகத் தோற்றம் பெற்ற இரண்டு சமூக இயக்கங்களைக் குறிப்பிடுக.

1) .....

2) .....

(15) "சோல்பரி யாப்பின் கீழ் தாபிக்கப்பட்ட பாராளுமன்றுக்கு சட்டவாக்கம் தொடர்பான பூரண இறைமை அதிகாரம் வழங்கப்படவில்லை என்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்தாகும்." அப் பாராளுமன்றின் அதிகாரத்தின் மீது விதிக்கப்பட்ட இரண்டு வரையறைகளைக் குறிப்பிடுக.

1) .....

2) .....

(16) 1972 யாப்பின் கீழ் தாபிக்கப்பட்ட இரண்டு விசேட யாப்புசார் தாபனங்களைக் குறிப்பிடுக.

1) .....

2) .....

